”மானிடத்தின் அறைகூவல்
இலக்கியத்தின் நுழைவாசல்”



# ஒரு லண்டன் பொடியன்

A LONDON BOY

மு.தயாளன்

மகுடம் வெளியீடு

# ஒரு லண்டன் பொடியன்

**மு. தயாளன்**

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

ISBN : 978-955-4041-17-2

**மகுடம் பதிப்பக வெளியீடு - 21**

● நூல் - ஒரு லண்டன் பொடியன் - சிறுகதைத்தொகுதி ● ஆசிரியர் - மு.தயாளன் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - ஜுலை - 2019 ● பக்கம் - 96 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● அட்டைப் படம் - T. சௌந்தர் ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 380.00

● Book - Oru London Podiyan ● Author - M. Thayalan ● © Author ● First Edition - July - 2019 ● Size - 1/10 ● Pages - 96 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Cover Design - T.Sownthar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 380.00



**சமர்ப்பணம்**

என் எழுத்துக்களோடு பயணித்து
எனக்கு ஊக்கம் தந்து என்னைப் புடம்போட்டு
எனக்குள் உள்ள என்னை அடையாளம் காட்டி
இறைவனோடு ஐக்கியமாகிவிட்ட
என் தாய் மாமன்
அமரர் திரு க. சிதம்பரப்பிள்ளை
அவர்கட்கு இந் நூல் சமர்ப்பணம்.

## ஆசிரியரின் ஏனைய படைப்புகள்

- கடல் கடந்து போனவர்கள் (நாவல்)
- சில மனிதர்களும் சில நியாயங்களும் (நாவல்)
- மண்ணில் தெரியுது வானம் (கட்டுரை)
- என் பேனாவிலிருந்து... (தொகுப்பு)
- தயாளனின் குறும்பாக்கள் (குறும்பா) மகுடம் வெளியீடு
- புளியமரம் (சிறுகதைத் தொகுப்பு) மகுடம் வெளியீடு
- மடிவேன் என்று நினைத்தாயோ? (கவிதை) மகுடம் வெளியீடு

## வரவிருப்பவை

- மூவடியாயிரம்
- நானும் கவிதைகளும் (கவிதை)
- கரும்பலகைகள் (நாவல்)

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 22வது வெளியீடாக பிரபல எழுத்தாளர் மு. தயாளனின் ஒரு லண்டன் பொடியன் என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் பெருமகிழ் வடைகின்றோம்

மகுடம் பதிப்பகம் வெளியிடும் கரவை மு. தயாளனின் நான்காவது நூல் இதுவாகும். வருடத்திற்கு இரண்டு என்ற அடிப்படையில் அவர் தனது நூல்களை வெளியிட்டு வருகின்றார். கடந்த இரண்டு வருடங்களாக இது நடைபெற்று வருகின்றது.

சென்ற வருடம் அவரது புளியமரம் (சிறுகதை) தயாளனின் குறும்பாக்கள் (குறும்பா) என இரண்டு நூல்கள் வெளிவந்து வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றது

லண்டனில் வெளியீட்டினையும், தாயகத்தில் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை என பல பிரதேசங்களில் அறிமுக விழாக்களையும் நடாத்தி வருபவர் இவர் ஒருவராகத்தான் இருக்கமுடியும்.

தாயக வாசகர்களுக்காக இவர் தனது நூல்களை இலவசமாக வழங்கி வைப்பதும் முக்கியமான ஓர் அம்சமாகும்.

இவ்வருடம் அவரது மடிவேன் என்று நினைத்தாயா? கவிதைத் தொகுப்பும், ஒரு லண்டன்பொடியன் என்ற இச் சிறுகதைத் தொகுப்பும் வெளிவருகின்றது.

இவர் தனது சிறுகதைகளை தனது வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு படைத்து வருகின்றார். இவரது கதை சொல்லும் பாணி வித்தியாசமானது. இங்கு தேவையற்ற வர்ணிப்புகளோ, சுற்றிவளைப்புகளோ இருக்காது. நேரடியாக

தான் சொல்ல வந்த விடயத்தினை மிகத்தெளிவாக மிகச் சுருக்கமாக வாசகர்களுக்கு புரியும் வகையில் படைத்து வருகின்றார்.

பிரபல சிறுகதைப்படைப்பாளி புதுமைப்பித்தனின் பாணி இவரது கதைகளில் தெரிகின்றது.

தயாளனின் சிறுகதை வெளி பரந்தது. அது தாயகத்தின் வாழ்வியலையும் பேசும், புலம் பெயர் தேசத்து வாழ்வியலையும் பேசும். இரண்டையும் அவர் சமமாக பாவிப்பதனால் அவரது படைப்புக்களில் ஒரு சர்வதேச பார்வையை தரிசிக்க முடியும்.

உலகத்தை தனது கட்சி சார்ந்த பொதுவுடமை தன்மையுடன் பார்த்திடும் அவரது பார்வை அவரது படைப்பகளில் தெரிகின்றது.

தனது கொள்கையில உறுதியாக நின்றாலும் அவர் ஆன்மீகத்தையும் மறுக்கவில்லை அண்மைக்காலமாக ஆன்மீகத்தில் பயணிக்கும் அவரது படைப்புகளில் ஆன்மிக வாசனையையும் நுகரமுடியும்.

இது பல தளங்களில் பயணித்து பக்குவப்பட்ட ஒரு மனிதனின் பார்வை. இதுவே அவரது படைப்புகளின் வெற்றி எனலாம்.

வாழ்த்துக்களுடன்

**வி.மைக்கல் கொலின்**

ஆசிரியர் – மகுடம்

## அணிந்துரை

கரவை மு.தயாளன் அண்மைக்காலமாக நிறையவே எழுதுகிறார். சிறுகதைத் தொகுதிகள், கவிதைத்தொகுதிகள் என்று பல நூல்களைத் தற்போது வசிக்கும் ஐக்கிய இராச்சியத் திலும் தனது சொந்த மண்ணிலும் ஒரிரு வருடங்களுக்குள் வெளியிட்டிருக்கிறார். அந்தப் படைப்புலகச் செயற்பாடுகளின் வரிசையில் இப்போது பத்துச் சிறுகதைகளைக் கொண்ட இந்தத் தொகுதி வெளிவருகிறது.

தனது இளமைக்காலத்தில் இருந்தே பொதுவுடமைத் தத்துவத்தின் ஆழமான செல்வாக்கிற்குள்ளான தயாளன் சமூகக்கொடுமைகளைக் கிஞ்சித்தும் சகித்துக் கொள்ள முடியாதவர். அவரை ஏராளமாக எழுதத்தூண்டுவதே சமூகத்தில் மாற்றத்தை வேண்டிநிற்கும் கோட்பாட்டின் தாக்கத்தினால் அவரிடம் வேரூன்றியிருக்கும் சிறுமை கண்டு பொங்கும் குணவியல்பேயாகும் என்பதில் சந்தேகமில்லை.

அவருடைய படைப்புக்களில் குறிப்பாகச் சிறுகதைகளில் பொதுவில் காணப்படக்கூடியதாக இருக்கும் தனித்துவமான அம்சம் புனைவுகளுக்கு இடங்கொடா திருப்பதில் அவர் காட்டுகின்ற அக்கறையாகும். ஒரு கதையின் மூலமாக சமூகத்துக்கு ஒரு செய்தியைச் சொல்லத் தயாளன் விரும்புகிறாரென்றால், ஆலாபனைகளை விடுத்து நேரடியாகவே தான் உருவாக்குகின்ற பாத்திரங்களின் மூலமாக எளிய மொழியில் கூறிவிடுகிறார்.

சிறுகதைகளைப் படைப்பதிலோ அல்லது வாசிப் பதிலோ ரசனை உணர்வு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும்

தயாளனின் சிந்தனை, புனைவில் நாட்டம் காட்டுவதில்லை.

சிக்கலான மனித வாழ்வின் பிரச்சினைகளை மக்கள் சுலபமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறையில் அவர் மிகவும் எளிய மொழிநடையைக் கையாண்டுவருகிறார்.

அண்மைக் காலமாகத் தயாளன் தான் பிறந்து வாழ்ந்த வடமராட்சியின் கரவெட்டியின் சமூகவாழ்வில் தான் அனுபவித்தவற்றையும் கொழும்பில் வாழ்ந்த காலத்துத் தரிசனங்களையும் பின்னர் புலம்பெயர்வாழ்வின் கோலங் களையும் கருப்பொருளாகக்கொண்ட படைப்புக்களையே தந்து கொண்டிருக்கிறார். நானும் கரவெட்டியைச் சேர்ந்தவன் என்பதால் தயாளனின் சிறுகதைகளை வாசிக்கும் போதெல்லாம் அவற்றில் வருகின்ற பாத்திரங்கள் நிஜவாழ்வில் யாராக இருக்கும் என்று மனதுக்குள் ஒரு தேடலில் இறங்குகிறேன்.

பல கதைகளின் ''நிஜப்பாத்திரங்களை'' அடையாளம் காண்பது தயாளனின் ஊரைச் சேர்ந்த வாசகர்களுக்குச் சிரமமாயிராது. அவர் கதைகளில் கையாளுகின்ற சம்பவங்கள், பாத்திரங்களை நோக்கும்போது அவற்றுள் நாமும் அங்கமாக இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டுவிடுகிறது.

தயாளனின் வாழ்க்கை அனுபவப்புலமும் சமூக அரசியல் பார்வையும் அவரின் சிறுகதைகளின் ஒவ்வொரு வரியிலும் பிரதி பலிக்கும். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் பலர் புலம்பெயர்ந்த பின்னர் நம்மவர் களின் வெளிநாட்டு வாழ்க்கையையும் அதில் அவர்கள் முகங்கொடுக்கின்ற சவால்களையும் தொனிப்பொருளாகக் கொண்டு படைப்புக்களைத் தத்தமக்கே உரித்தான பாணியில் வெளியிட்டிருக்கிறார்கள். தயாளனைப் பொறுத்தவரை,

புலம்பெயர் வாழ்வைத் தொனிப் பொருளாகக்கொண்டு அவர் படைத்திருப்பவற்றில் பெரும்பாலானவை புலம்பெயர் வாழ்வு நம்மவர்களின் குடும்ப வாழ்க்கையில் ஏற்படுத்தி யிருக்கக் கூடிய விரும்பத்தகாத மாற்றங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுபவையாகவே அமைந்திருக்கின்றன.

இந்தத் தொகுதியில் அடங்கியிருக்கும் பத்துச் சிறுகதைகளும் அவரின் ஏனைய சிறுகதைத் தொகுதிகளில் உள்ளவை போன்றே சொந்த ஊரிலும் புலம்பெயர் வாழ்விலும் நமது சமூகத்தவர் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளையும் பழமைவாத வாழ்வில் இருந்து புதியதொரு தேசத்தில் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு இசைவாக்கம் பெறுவதில் உள்ள மனத் தடைகளையும் மையமாகக் கொண்டவையாக இருக்கின்றன.

வடமராட்சியில் நிலவிய சாதிக்கொடுமையின் விளைவான நிகழ்வுப்போக்குகளை அருகாக இருந்து தரிசித்த அனுபவத்தை நிறையவே கொண்டவர் தயாளன் என்பதைச் சாதிக் கொடுமையைச் சாடும் அவரின் பல கதைகளின் மூலம் உணரக் கூடியதாக இருக்கிறது. இந்த நூலில் வருகின்ற ' கண்ணீரிலெழுத்து ' என்ற சிறுகதை 1960 களின் பிற் பகுதியில் அல்லது 1970 களின் முற்பகுதியில் தயாளனின் ஊரில் இடம்பெற்ற உண்மைச்சம்பவத்தை பின்னணியாகக் கொண்டதாகும். பொதுவுடமைவாதக் கோட்பாட்டின் செல்வாக்கு அதை இன்றைய தலைமுறையி னருக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்ற தூண்டுதலைத் தயாளனுக்குக் கொடுத்திருக்கிறது. அவர் பரிசோதனைகள் செய்வதில்லை. பார்த்தவற்றை, உணர்ந்தவற்றை, தரிசித்த வற்றை தனது எழுத்துக்களுக்கான கருவாக்கி விடுகிறார்.

அதனால் அவரிடம் சிந்தனைக் குழப்பம் சிறிதும் இல்லை. அத்துடன் அவரின் வயதையொத்தவர்களைக் கடந்த காலத்துக்கு அழைத்துச் சென்றுவிடுகிறார். அவரின் பல சிறுகதைகள் எம்மைப் பின்னோக்கிப் பார்க்க வைக்கின்றன. 'நொண்டி'' என்ற கதையில் அண்ணாவியார் கூத்துப் பழக்குவது பற்றி வருகிறது.

கரவெட்டியில் அந்த 'நிஜப்பாத்திரம்'' யார் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. மனிதகுலத்தை நேசிக்கின்ற பண்பும் சமூகத்தின் பொது நலன்களில் அக்கறையும் சிறுமை கண்டு பொங்குகின்ற சுபாவமும்தான் தயாளனின் எழுத்தாற்றலுக்கு வீரியத்தைச் சேர்க்கின்றன. அவர் மனிதாபிமானத்தை மாத்திரமல்ல, மிருகங்கள், தாவரங்கள் மீதும் இரக்கம் கொண்டவர் என்பதற்கு இந் நூலில் இரு கதைகள் சான்று.

''கருவறை'' என்ற சிறுகதையில் ''வைத்தியர்களையும் குற்றம் சுமத்தமுடியாது. அவர்களின் அறிவுலகம் இயந்திரங் களின் முடிவுகளிலேயே தங்கியிருக்கிறது. அதைத் தாண்டி அவர்களால் சிந்திக்கமுடிவதில்லை' என்ற தயாளனின் கூற்று அற்புதமானது.

தயாளனின் எழுத்துப்பணி தொடர எமது வாழ்த்துகளும் பாராட்டுக்களும்.

**வீரகத்தி தனபாலசிங்கம்,**
பத்திரிகையாளர்,
9 1/5 அல்விஸ் பிளேஸ், கொழும்பு – 13, இலங்கை

# என்னுரை

இந்தத் தொகுப்பில் 10 கதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் இரண்டு கதைகள் நான் 1970 களில் எழுதியவை. மற்றையவை 2017 - 2019 களில் எழுதப்பட்டவை.

எழுத்து எனக்குத் தொழிலல்ல அதே நேரம் எழுத்து எனது பொழுது போக்கு அம்சமுமல்ல.

உத்திகளைத் தேடியலையும் எழுத்தாளனுமல்ல.

எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதுகிறேன். எழுத்தால் எதையும் சாதித்துவிடலாம் என்ற மமதையும் இல்லை. என்னுடைய எழுத்தை வாசிக்கும்போது வாசிப்பவர் மனம் சந்தோசப்பட வேண்டும் என எண்ணுகிறேன்.

எழுபதுகளில் எழுத ஆரம்பித்த நான் இடையில் ஒதுங்கியிருந்தேன். இக் கால கட்டத்தில் நன்றாக வாசிக்கத் தொடங்கியிருந்தேன். பின்பு கடல் கடந்து போனவர்கள் என்ற நாவலைப் பாரீசிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தமிழன் என்கின்ற வாரப்பத்திரிகையில் தொடராக எழுதினேன். பின்பு சிறிது இடைவேளை. 2017 இலிருந்து வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறேன்.

என்னுடைய எல்லாக் கதைகளும் மக்களின் பிரச்சினை களாகவும் அவற்றில் ஏதோ ஒரு விதத்தில் நான் சம்பந்தப் பட்டவைகளாகவுமே இருக்கின்றன. கூடுதலானவைகள் மக்களின் பிரச்சினைகளை உளவியல் ரீதியாக ஆராய்பவை யாகவுமே அமைக்கிறேன். எந்தவித உத்திகளுமில்லாமல் கதையை எழுந்தமானமாக நேராகச் சொல்லுவதாக சில நண்பர்கள் குற்றம் சொல்வதுண்டு. நான் என் முதற் தொகுப்பிலேயே நான் ஒரு கதை சொல்லி மாத்திரமே என்று கூறியிருக்கிறேன்.

நவீன உத்தி சமாச்சாரத்தில் எனக்கு ஈடுபாடில்லை. இப்போ கவிதை உலகத்தில் புதுப்புது உத்திகளைப் பாவிப் பதாகக் கூறி யாருக்குமே எதுவும் புரியாமல் வரும் கவிதைகள் போல் சிறுகதை உலகமும் அப்படியாகி விடக்கூடாது என்பதை உத்திகளைக் கேட்கும் நண்பர்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறேன். ஒரு சம்பவம்தான் சிறுகதை என நம்புபவன் தான் நான்.

சம்பவத்தைக் கேட்டமாத்திரத்திலே அல்லது பார்த்த மாத்திரத்திலே கதையாக்கி விடுகிறேன்.

இங்கே நான் பார்க்கும் சம்பவங்களை என் கொள்கைகளோடு மோத விடுகின்றேன்.

கருத்துரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நான் கொண்ட கொள்கை அச் சம்பவத்தை அலசிப் பார்த்து மோதி வெளியே தள்ளுகின்ற அந்தப் புடம் போட்ட சம்பவமே கதையாகிறது. ஒரு சம்பவம் நிகழ்ந்து அது என்னால் கதையாக்கப்படும் போது அதை வாசிக்கின்ற வாசகன் தானே ஒரு முடிவை என் கதைகளுக்கு நிர்ணயிக்கிறான். பல தடவைகள் என்னுடைய மனதிற்குள் நான் எண்ணியிருந்த முடிவுகளும் வாசகனின் முடிவுகளும் ஒன்றிணைந்ததை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்திருக்கிறேன். எந்தக் கதைக்கும் நானே முடிவைக் கூறிப் பிரச்சாரியாக மாறவோ அல்லது என் முடிவை வாசகர்களிடம் திணிக்கவோ விரும்பியதில்லை. அது என் தொழிலுமில்லை.

இந்தத் தொகுப்பின் பத்துக் கதைகளும் பத்துச் சம்பவங்கள். பெயர்களை மட்டும் என் கற்பனைக்கு விட்டு விட்டேன். நிரம்பக் கதைத்து குழப்ப விரும்பவில்லை.

இந்தத் தொகுதியை திறம்படப் பதிப்பித்து

வெளியிடுகின்ற மகுடம் பதிப்பகத்தினருக்கும் குறிப்பாக அதன் பொறுப்பாளர் மைக்கேல் கொலினுக்கும் என் இதய பூர்வமான நன்றி.

அத்தோடு இதனை அழகாக அச்சிட்டுத் தரும் வணசிங்க அச்சகத்தாருக்கும் அதன் ஊழியர்களுக்கும் என் நன்றி.

தன்னுடைய வேலைப் பழுவிற்கிடையிலும் என் வேண்டுகோளை ஏற்று அணிந்துரை எழுதித்தந்த அனுபவம் நிறைந்த கூர்மையான பார்வை கொண்ட நண்பரும் உறவினருமான பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம் அவர்களுக்கும் இப் புத்தகத்தின் அட்டைப் படத்தை அழகுற வரைந்து தந்த நண்பர் T. சௌந்தர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

அத்தோடு எழுத்துப் பிழைகளை துல்லியமாகப் பார்த்துதவிய திருமதி ஆர்த்தி துவாரகன் அவர்களுக்கும் என் மனைவிக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.

இறுதியாக என்னை எழுதத் தூண்டித் தொடர்ந்து எழுத வைத்துக் கொண்டிருக்கும் என் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மனைவி ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றி.

வாசகர்களாகிய உங்களுக்கு ஒரு சிறு வேண்டுகோள். உங்களுடைய நேரத்தை ஒதுக்கிப் படித்தபின் உங்கள் அபிப்பிராயங்களை என்னுடைய மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

**மு. தயாளன்**
natkuna21@gmail.com

# உள்ளே

ஒரு லண்டன் பொடியன்
அப்பா போட்ட குடிசை
ஆசிரியம்
கண்ணீரிலெழுத்து
தெளிவு
நொண்டி
லியோ என்னும் ஒரு நாய்க் குட்டி
கருவறை
மூன்று மரங்கள்
நான் நல்லவள்

# ஒரு லண்டன் பொடியன்

அவன் அவசர அவசரமாக வீட்டுக்குள் புகுந்து நேராகத் தன் அறைக்குள் சென்று விட்டான்.

அவனது பெயர் தினேஸ். வயது பதினேழு. குடும்பத்துக்கு ஒரே ஒரு பிள்ளை. இவன் பிறந்தது வளர்வது லண்டனில்தான்.

லண்டன் பல கலாசாரங்களையும் வித்தியாசமான மனிதாபிமான அணுகு முறைகளையும் கொண்ட நாடு. இதனால் பல விரும்பத்தகாத கலாசார மோதல்கள் அவ்வப்போது நடந்தேறும். இங்குள்ள கல்வித் திட்டங்கள் மாணவர்களை ஆசிரியர்கள் அணுகுகின்ற முறையெல்லாம் ஆசிய நாடுகளை விட முற்று முழுதாக வேறு பட்டவை களே. இங்கு பிறந்து வளரும் பிள்ளைகள் வீட்டுக் கலாசாரத்துக்கும் வெளியில் அவர்கள் சந்திக்கும் கலாசாரங்களுக்கும் இடையில் அகப்பட்டுப் படுந்து யரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இப்படியான சூழலில் பிறந்து வளர்ந்த அவன் வீட்டுக்குள் நுழைந்தபோது அவனுடைய அப்பா தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரது பெயர் சிவராசா. வயது ஐம்பது.

கல்வித் திணைக்களத்தில் உயர் அதிகாரி.

குடும்பத் தலைவர்.

அவன் வந்தபோது தொலைக்காட்சியை விட்டுத் தலையைத் திருப்பி ஒரு தரம் அவனைப் பார்த்துவிட்டு மீண்டும் தொலைக்காட்சி பார்த்தலைத் தொடர்ந்தார்.

அவன் வந்த சத்தம் அவன் அம்மா மரகதத்துக்கும் கேட்டிருக்க வேண்டும்.

அவள் அதனைப் பெரிதாக எடுக்கவில்லை. கறிக்கு உப்புப் போடுவதில் அவள் கவனம் இருந்தது.

அவள் பெயர் மரகதம். வயது நாற்பத்தியாறு. செந்தழிப்பான முகம். அவள் சிரிப்பது துருவிய தேங்காய்ப் பூ பொல பொல வென்று விழுவது போல் இருக்கும் இவர்களோடு அந்த வீட்டில் எண்பது வயதில் ஒரு மூதாட்டியும் உள்ளார்.

அவளது பெயர் வடிவுக்கரசி. இவள் மரகதத்தின் அம்மா. அனுபவம் நிறைந்த பெண். தொலைக் காட்சியில் வரும் ஒரு நாடகத்தையும் தவற விடமாட்டாள்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தி மூன்று இனக்கலவரத்திற்குப் பின் லண்டனை நோக்கி இடம் பெயர்ந்த குடும்பங்களில் இவர்களின் குடும்பமும் ஒன்று.

லண்டன் வந்த பின்பே தினேஸ் பிறந்திருந்தான். தினேஸ் பிறந்தபோது சிவராசாவின் மகிழ்ச்சி எல்லை யற்றதாக இருந்தது.

குடும்பத்துக்கு ஒரு வாரிசாகத் தினேஸ் வந்து விட்டானென்று சிவராசாவும் மரகதமும் சந்தோசப்பட்டனர். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கற்கண்டு கொடுத்துத் தம் சந்தோசத்தை வெளிப்படுத்திக் கொண்டனர்.

தினேஸ் உருண்டு திரண்டு வட்ட முகத்தோடு அழகாக இருந்தான். அவன் வெள்ளைத் தோலோடு பிறந்திருந்தது மேலும் இவர்களுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது.

வெள்ளைத் தோலோடு பிறக்கும் பிள்ளைகளுக்கு தமிழர்கள் மத்தியில் ஒரு தனி மரியாதை உண்டு.

பிள்ளை பிறந்தவுடன் 'ஆம்பிளைப் பிள்ளையோ?' என்று கேட்பார்கள். அடுத்த கேள்வியாக 'என்ன பிள்ளை நல்ல நிறமே' என்றுதான் கேட்பார்கள்.

இந்த உசாவல் தமிழர்கள் மத்தியில் சகஜம்.

தினேசினுடைய பிறப்புடன் மரகதத்தின் வேலைப் பழுவைக் குறைப்பதற்காக அவளின் அம்மாவையும் லண்டனுக்கு அழைத்தார்கள்.

தினேஸ் பிறந்து மூன்றாம் மாதமே அவனை வைத்தியராக்கவேண்டு மென்று சிவராசாவும் மரகதமும் தீர்மானித்துக் கொண்டனர். இது ஒரு மாமூலான தமிழரின் சிந்தனையே.

இந்தச் சிந்தனையை நடைமுறைப் படுத்துவதை நோக்காகக் கொண்டே அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கான திட்டமிடலும் இருக்கும். சேமிப்பும் அதை நோக்கியதாகவே இருக்கும்.

தினேசும் படிப்பில் கெட்டிக்காரனாகவே இருந்தான். அவனைப் பற்றி எல்லா ஆசிரியர்களும் பெருமையாகவே கூறினர்.

திினேஸ் பிறந்த நேரம் சிவராசாவுக்குப் பல நல்ல காரியங்கள் எல்லாம் நடந்தன.

அவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது.

சம்பளம் அதி உச்சத்தை அண்மியிருந்தது.

சமூகத்தில் அவர் நன்கு கவனிக்கப்பட்டார்.

இவையெல்லாம் தினேஸ் பிறந்ததால்தான் என்று சிவராசாவும் மரகதமும் எண்ணிக் கொண்டனர்.

அவன் பிறந்த பின்புதான் அவர்கள் சொந்தமாக ஒரு வீடும் வாங்கிக் கொண்டனர். நான்கு அறைகள் கொண்ட அழகான ஒரு வீடு.

இப்படி எல்லாமே மனதுக்குப் பிடித்த வண்ணம் நடப்பதால் தினேசுக்கு வீட்டில் நல்ல மரியாதை. அவன் கேட்டதெல்லாம் சந்தோசமாக வாங்கிக் கொடுத்தனர்.

புதிதாக வாங்கிய வீட்டில் தினேசுக்குத் தனியான ஒரு அறையும் ஒதுக்கினார்கள்.

அவனுடைய அறையில் தொலைக்காட்சிப் பெட்டி, தொலைபேசி, கணினி எனப் பல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

சிறு வயதிலேயே கைப்பேசியும் வாங்கிக் கொடுத்தார்கள்.

ஒரு நடுத்தர வர்க்கத்தைச்சேர்ந்தவரின் பொருளா தாரத்துக்கு மேலாகத் தினேசின்வசதிகள் அமைந்திருந்தன.

அவனும் தன் நண்பர்களுக்கெல்லாம் சொல்லிச் சந்தோசமாகவே இருந்தான்.

தன் நண்பர்களை வீட்டுக்கும் அழைத்து வருவான். ஆண் நண்பர்களும் பெண் நண்பர்களும் வீட்டுக்கு வருவார்கள்.

தாங்கள் ஒன்றாக இருந்து பரீட்சைக்குத் தயார் செய்வதாகக் கூறிக் கொள்வான்.

சிவராசாவும் தன் பிள்ளை படிக்கிறான் என்ற எண்ணத்தில் சந்தோசமாக இருந்தார்.

சிவராசா வீட்டில் இருக்குமட்டும் அமைதியாக இருக்கும் அறை அவர் வெளியில் போனதும் சுனாமியாக மாறி விடும்.

இதனை அவதானித்த வடிவுக்கரசி மரகதத்திடம் சாடைமாடையாகக் கூறுவாள்.

இந்தக் காலத்துப் பிள்ளைகள் அப்படித்தான் என்று சொல்லி வடிவுக்கரசியை அடக்கி விடுவாள் மரகதம். இந்த விடயங்களை மரகதம் சிவராசாவுக்குச் சொல்வதில்லை.

சொல்வதால் அவர்கவலைப்படலாம் அல்லது கோபப்படலாம் என்பது அவளின் கணிப்பு. என்னதான் தாயை அடக்கினாலும் அவளின் உள் மனதில் சுரீரென்று ஊசியால் குத்துவதுபோல் ஒரு வலி இருக்கும்.

இதனை மறப்பதற்காகத் தன் பெரும்பாலான நேரத்தைச் சமையலிலும் நாடகங்கள்பார்ப்பதிலும் செலவிடுவாள்.

இவன் வளராமலே இருந்திருக்கலாம் என மனதுள் முணுமுணுப்பாள்.

ஒரு தடவை தினேஸ் வெளியில் யாரோ ஒரு பையனோடு மூர்க்கத்தனமாகச் சண்டையிட்டதாக மரகதத்தின் நண்பி வந்து சொன்னாள்.

மரகதம் இதனையும் சிவராசாவிடமிருந்து மறைத்திருந்தாள். இப்படிப் பல மூர்க்க குணங்கள்

அவனுள் உருவாகி வருவதை சிவராசாவிடம் மறைத்தே வந்தாள் மரகதம்.

இது தவறு என்று வடிவுக்கரசி எடுத்துரைத்த போதும் மரகதம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இது அம்மாக்களின் சுபாவம்.

அதே நேரம் தினேசைத் தட்டிக் கேட்கும் தைரியமும் அவளிடம் இருக்கவில்லை.

ஒரு நாள் வெளியில் போன தினேஸ் வரும்போது ஒற்றைக் காதில் கடுக்கனோடு வந்தான்.

இதனைச் சிவராசா - மரகதம் - வடிவுக்கரசி மூவருமே அவதானித்திருந்தாலும் அதைப்பற்றி மூவரும் உரையாடாமல் அமைதியாகவே இருந்தார்கள்.

ஒரு தடவை வடிவுக்கரசி மரகதத்திடம் 'பிள்ளை தம்பியிட்டை வாற பொடிய ளெல்லாம் தோடு போட்டிருக் கிறாங்கள். ஒரு நாளைக்கு இவனும் போடப் போகிறான்' என்று சொன்னதை இப்போ மரகதம் நினைத்துப் பார்த்தாள். அப்போது வடிவுக்கரசியும் மரகதத்தைப் பார்த்து நான் சொன்னது சரிதானே என்பதுபோல் தலையாட்டினாள்.

இது எத்தனை நாளாய் நடக்குது என்பதுபோல் சிவராசா மரகதத்தை நோக்கி மௌனமாகக் கேட்டார். மரகதம் எதுவுமே கூறாமல் அவரை மௌனமாகவே பார்த்தாள்.

தினேஸ் கெட்டுப் போவதற்கு தானும் ஒரு காரணமோ என்று கலங்கினாள்.

இப்படித் தினேசின் கோலம் பற்றி மூவரும் அமைதியாக மௌனமாகக் கதைத்துக் கொண்டனர்.

'இது பற்றி யாரும் அவனோடை கதைக்க

வேண்டாம்' என்று கூறிவிட்டு அவர் வெளியே புறப்பட்டு விட்டார்.

மரகதமும் வடிவுக்கரசியும் ஆளை ஆள் பார்த்துவிட்டு மீண்டும் நாடகத்தைப் பார்ப்பதில் மூழ்கி விட்டனர்.

நாடகம் பார்த்துக் கொண்டிருந்த சிவராசா ஏதோ நினைத்தவராய் எழும்பி வெளியே நடக்கலானார்.

சிவராசாவின் மனம் குழப்பமடைந்திருந்தது. அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்து விட்டேனோ என்று அவர் குழப்ப மடைந்திருந்தார்.

அவருடைய கால்கள் இப்போ அவனுடைய கணித ஆசிரியரின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கி இருந்தன.

கணித ஆசிரியர் வீட்டில் தான் நின்றிருந்தார். ஆசிரியர் பெயர் குமரன். நாற்பதுக்கும் ஐம்பதிற்கும் இடையில் வயதிருக்கும். இருவரும் ஆளுக்காள் குசலம் விசாரித்தபின் சிவராசா அமைதியாகத் தினேஸின் படிப்பு பற்றிக் கேட்டார்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த ஆசிரியர் மெதுவாகத் தினேஸ் இப்போ முன்பு மாதிரி இல்லை என்று கூறினார்.

முன்பு மாதிரி எண்டால் படிப்பில் கவனம் குறைவு. வீட்டு வேலைகள் ஒழுங்காகச் செய்வதில்லை.. அவருடைய நண்பர்கள் சரியில்லை.. என அடுக்கடுக்காகக் குற்றங்களைச் சுமத்தினார் ஆசிரியர்.

அமைதியாகச் செவிமடுத்துக் கொண்டிருந்த சிவராசா இவ்வளவு குறைகள் இருக்கேக்கை அவற்றை

ஏன் நீங்கள் அப்பப்ப சொல்லயில்லை.. என்று ஆறுதலாகக் கேட்டார்.

ஆசிரியரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. ஆசிரியர்கள் எதிர்மறையான அபிப்பிராயங்களை பெற்றோருக்குச் சொல்லக்கூடாது என்ற அரச அறிவுரையை ஒருதரம் நினைத்துக் கொண்டார்.

இன்று ஒரு தமிழ்ப் பையன் என்பதற்காக வெளிப்படையாகச் சில அபிப்பிராயங்களைச் சொல்லி இருந்தார்.

சிவராசாவுக்குக் குழப்பமாக இருந்தது. தான் கட்டிய கனவு வீடு பொலபொல வென்று விழுவது போலிருந்தது.

ஆனாலும் அவருக் கென்னவோ தன் மகன் தவறமாட்டான் என்ற நம்பிக்கை இன்னுமிருந்தது.

நேரே வீட்டுக்குத் திரும்ப வந்துவிட்டார். அமைதியாக அவர் இருப்பதைப் பார்த்து அருகில் சென்ற மரகதம் ‘எங்கை போனனியள்? என்று கேட்டாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த அவர் கலங்கிய கண்களுடன் தன் மனைவியைப் பார்த்து ‘தம்பியின்ரை.. மாஸ்டர் வீட்டை போனனான்.. படிப்பிலையும் குறைஞ் சிட்டானாம்’ என்று அவர் கூறியபோது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வடிவுக்கரசி ‘நான் அப்பவே சொன்னனான். உவன் காதிலையும் கடுக்கன் போட்டு.. தலைமயிரையும் கண்ட பாட்டுக்கு வெட்டி... வீட்டுக்கை வரேக்கை சிவந்த கண்ணோடை வாறானென்று’ நீங்கள் ஒருவரும் கேட்கயில்லை.

வடிவுக்கரசியின் இந்தக் குற்றச்சாட்டு மரகதத்தைக் குத்திக் கிழித்தது.

தாயினுடைய எந்தக் குற்றச் சாட்டையும் மரகதம் சிவராசாவிடம் சொன்னதில்லை. 'தம்பியின்ரை பலன் எப்படியோ தெரியாது.. ஒருக்கால் ஐயரிட்டை போய்க் கேட்பமேயப்பா' சிவராசா அவளைத் திரும்பிப் பார்த்தார்.

சிறிது கோபம் அவர் கண்களிலிருந்தது. சிவராசாவுக்கு இவைகளில் நம்பிக்கை இல்லை.

'நீ போறதெண்டால் போட்டு வா. நான் வரேல்லை. கொம்மாவையும் கூட்டிக் கொண்டு போ' மரகதத்துக்கு இது போதும்.

தாயையும் கூட்டிக் கொண்டு அடுத்த நாள் மாலை பக்கத்திலுள்ள கோயிலின் பிரதான குருக்களைச் சந்தித்தாள்.

அவர் விபரங்களைக் கேட்டுக் கட்டங்கள் போட்டுப் பார்த்துத் தினேசுக்கு இப்போ ஏழரை நடப்பதாகவும் கவனமாக இருக்கும் படியும் ஒவ்வொரு சனிக்கிழமையும் கோயிலுக்கு வந்து எள்ளெரிக்கும் படியும் கூறினார்.

மரகதத்துக்கும் தாயாருக்கும் இப்போ திருப்தி. இதை வந்து சிவராசாவுக்குச் சொன்னபோது அவர் மெல்லிதாகச் சிரித்துக் கொண்டார். இந்த எள்ளெரித்தலில் அவருக்கு உடன்பாடில்லாவிட்டாலும் மெதுவாகத் தலையை ஆட்டினார்.

முன்பு ஒரு தடவை அவன் கடுக்கன் போட்டு வந்தபோது கவலையீனமாக இருந்தது தவறென அவருக்குப் பட்டது.

மரகதமும் வடிவுக்கரசியும் எள்ளு எரித்தால் எல்லாம் சுகமாகுமென எண்ணி அமைதியாகினர். சிவராசாவால் அப்படி இருக்க முடிய வில்லை.

அவர் ஒன்றும் படியாதவரல்ல. தலை முறை தாண்டிய கலாசார அழிவுபற்றித் தெரியாதவருமில்லை. என்னதான் தெரிந்திருந்தாலும் தன் வீட்டில் அந்தக் கலாசார மோதல் வந்த போது அதை இயல்பாக அவரால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

அவன் வரப்போகிறான். இப்போ என்ன செய்வது. அவனை அதட்ட முடியாது.

அதட்டித் திருத்தக்கூடிய காலம் முடிந்துவிட்டது. குழப்பமாக இருந்தது. மகனது அறையை எட்டிப் பார்த்தார். அவன் அங்கு இல்லை. நேரத்தைப் பார்த்தார். இரவு ஏழு மணி. எட்டு மணிக்கு வருவான் என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

எட்டு.. ஒன்பது.. பத்து என்று நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அவன் வரவில்லை. வீட்டிற்கு வெளியில் வந்து வீதியைப் பார்த்தார். கண்ணுக் கெட்டிய தூரம்வரை அவன் வரவில்லை.

இப்போதான் முதன் முறையாகத் தான் தோற்றுப் போனேனோ எனக் கலங்கினார்.

மரகதத்திடம் வந்து தினேஸ் ஏதும் சொன்னவனா எனக் கேட்டார்.

இல்லையே எனக் கூறிவிட்டு நாடகத்தில் ஒன்றி விட்டாள் மரகதம்.

சிவராசா கதிரையில் பொத்தென்று இருந்தார்.

அப்போதான் அவன் அவசர அவசரமாக வந்து அறைக்குள் நுழைந்தான்.

சிவராசனும் அவன் அறைக்குள் நுழைந்தார்.

அவன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் பார்வையில் கதவைத் தட்டாமல் தகப்பன் நுழைந்து விட்டாரே என்ற கேள்வியும் சினமும் தொக்கி நின்றது.

'ஏன் தம்பி இவ்வளவு நேரம்' என்று அமைதியாகக் கேட்டார். அவன் அவரை நிமிர்ந்து பார்த்தான். கண்கள் கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்தன. ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தப்பி வந்ததுபோல் பதட்டமாக இருந்தான்.

கத்தினான். தகப்பனை வெளியில் போகச் சொன்னான்.

அவனுடைய சத்தத்தைக் கேட்டுத் துடிச்சுப் பறந்து ஓடி வந்தனர் மரகதமும் வடிவுக்கரசியும். சிவராசா எதுவுமே கதைக்கவில்லை. மெதுவாக வெளியில் வந்தார்.

அவரது கண்கள் கலங்கிக் குளமாகி இருந்தன. அமைதியாகக் கதிரையில் இருந்தார். 'நான் அப்பவே சொன்னனான். அளவுக்கதிகமாக எல்லாம் குடுக்கிறியள் உது பிள்ளையைக் கெடுக்கப் போகுதெண்டு.

இப்ப வெள்ளம் தலைக்கு மேலை.' வடிவுக்கரசி கூறினாள். அப்போ ஒரு தொலைபேசி வந்தது. மரகதம் தான் எடுத்தாள்.

மறு முனையில் சிவராசாவின் நண்பர்தான் எடுத்திருந்தார். 'உங்கடை மகன் வீட்டை வந்திட்டாரோ?' 'ஓம்' என்றாள் மரகதம்.

'நல்ல வேளை அவர் வந்திட்டார். இஞ்சை அவரின்ரை நண்பர் எல்லாரையும் போதைப் பொருளோடை பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போகுது' மரகதம் தலையில் கைவைத்தபடி அப்படியே இருந்துவிட்டாள்.

சிவராசாவின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

**ஜீவநதி - 2019**

# அப்பா போட்ட குடிசை

அன்று மதியம் தான் நடந்தது.

பள்ளிக்கூடத்தில் கணிதபாடம் நடத்திக் கொண்டிருந்த வேளைதான் உணர்ந்தேன். என்கால்கள் குளிர்ந்து ஈரமாவதுபோல் உணர்ந்தேன். நான் இருந்த வாங்கில் ஈரமாவெனக் குனிந்து பார்த்தேன். அப்படியாக எதுவும் இல்லை. அப்போ எப்படி என் கால்கள் ஈரமாகின்றன!

குழப்பமுற்ற நான் பக்கத்திலிருந்த சாந்தியிடம் காதுக்குள் முணுமுணுத்தேன். அவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லைச் சிரித்தாள். நான் மீண்டும் குழப்பமாக அவளைப் பார்த்தேன்.

அவள் என்னைப் பார்த்து “பொறு வாறன்” என்று கூறிவிட்டுக் கணக்குப்பாடம் எடுத்துக் கொண்டிருந்த கனகேஸ்வரி ஆசிரியையை நோக்கிச் சென்று அவவிடம் மெதுவாகத் தணிந்த குரலில் ஏதோ கூறுவது தெரிந்தது.

எனக்குப் பயமாக இருந்தது. ஆசிரியை என்னைப் பார்த்து வெளியே வரும்படி சைகை காட்டிவிட்டு வெளியே சாந்தியுடன் சென்றார். நானும் அவர்களைத் தொடர்ந்து வெளியே சென்றேன். வகுப்பிலுள்ளவர்கள் எதுவும் புரியாமல் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்

வெளியே சென்றதும் சாந்தியிடம் 'என்னடி இது?' என்று கேட்டேன். அதற்குள் ரீச்சர் முந்திக் கொண்டு 'ஒன்றுக்கும் கவலைப்படாதை. இது ஒரு சாதாரண விடயம் தான். இப்ப சாந்தியோடை வீட்டை போ' என்று எனக்குக் கூறிவிட்டு 'சாந்தி நீயும் போ' என்று கூறிவிட்டு வகுப்பறையுள் சென்றுவிட்டா.

வீதியால் வரும்போது நாங்களிருவரும் பல விடயங்களைக் கதைத்துக் கொண்டோம். 'என்னடி எனக்கு நடந்தது?' என்று கேட்டேன். 'நீ சாமத்தியப் பட்டிட்டாயடி' என்று சொன்னாள்.

சாந்திக்கு இது ஒருவருடத்துக்கு முந்தி நடந்ததாம். நானும் அந்த நிகழ்ச்சிக்கு வந்ததாகக் கூறினாள். எனக்கு ஞாபகமில்லை..

அவளுக்கு நடந்த விடயங்களை எல்லாம் கூறினாள். அவற்றைக் கேட்டவுடன் மனதில் பயம் வந்தது. 'இனிமல் வாழ்க்கை தலைகீழாக மாறி விடுமடி' என்று அவள் கூறியபோது எனக்கு மிகுந்த பயமாக இருந்தது.

கதைத்தபடி வந்ததால் நேரம் போனதே தெரிய வில்லை. சாந்தி என் அம்மாவிடம் என்னை ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டாள்.

இந்த நிகழ்ச்சியால் அம்மா மிகுந்த சந்தோசத்தில் இருந்தாள்.

அம்மம்மாவுக்கும் கூறிவிட்டு அப்பாவைக் கூட்டி வருகிறேன் என்று கூறிவிட்டு வெளியே சென்றாள். 'பிள்ளை நீ அந்த மூலையிலை போய் இரு. இனிமல் ஐந்து நாளைக்குக் வீட்டுக்குள் எல்லாம் வரக்கூடாது' என்று அம்மம்மா கூறினாள்.

எனக்கு வியப்பாக இருந்தது. சாந்தி இப்படிக் கூறவில்லையே என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் ஒவ்வொரு வீட்டிலை ஒவ்வொரு மாதிரிச் செய்வார்கள் என்றும் கூறியிருந்தாள். எங்கடை வீட்டை இப்படித் தானாக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

'ஏன்? அம்மம்மாவிடம் கேட்டேன். 'அது அப்படித்தான். ஏனென்று கேட்கக் கூடாது?' என்றாள்.

'ஐஞ்சு நாளைக்கும் இங்கையா?' என்று கேட்டேன். 'உதிலையில்லை. உன்ரை அப்பா வந்து தோட்டத்துக்கை கொட்டில் போடுவார். நீ அதுக்கைதான் படுக்கவேணும்.' 'என்ன?' நான் திகைத்துப்போனேன்.
'தனியவா நான் படுக்க வேணும்?'

'ஓம்' அம்மம்மாவின் பதில் அறுதியாக வந்தது. சிறிது நேரத்தில் அம்மாவும் அப்பாவும் வந்து விட்டார்கள். அப்பாவின் முகத்திலும் சந்தோசம் இருப்பதை அவதானித்தேன். இவர்கள் ஏன் இவ்வளவு சந்தோசப் படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவேயில்லை. அப்பா தோட்டத்துக்குள் சென்று கொட்டில் அமைப்பதில் ஈடுபடத் தொடங்கினார். கதவு தட்டிச் சத்தம் கேட்டது. அம்மம்மா சென்று கதவைத் திறந்தாள்.

பக்கத்து வீட்டு அன்ரி வந்திருந்தா. அந்த அன்ரி லண்டனிலை இருந்து வந்திருக்கிறா.

விடுமுறைக்காக வந்திருக்கவேணும். அம்மாவும் குசினிக்குள்ளிருந்து வெளியே வந்து 'வாங்கோ.. வாங்கோ' என வரவேற்றாள். நான் மூலையில் ஒடுங்கிப் போயிருந் தேன். பலவிடயங்களைக் கதைத்துக் கொண்டார்கள். கதையின் இடையில்

'ஏன் உங்கடை மகள் அந்த மூலையிலை இருக்கிறா?
'வாம்மா இஞ்சை' என்று என்னை அவ கூப்பிட்டா
'இல்லை அவ இஞ்சை வரமாட்டா. அவ வயதுக்கு வந்திட்டா. அங்கைதான் ஐஞ்சு நாளைக்கு இருக்கவேணும்' இப்படி அம்மா கூறியதும் அந்த அன்ரிக்கு திகைப்பாகவும் வியப்பாகவும் இருந்தது.
'இந்தக் காலத்திலையும் இப்படியா செய்யிறது?' அவ கேட்டா.
'எந்தக் காலத்திலையும் சம்பிரதாயம் சம்பிரதாயந்தான் பாருங்கோ' என்று சற்று அதட்டலாக அம்மம்மா கூறினா.

'அங்கை லண்டனிலை நாங்கள் அடுத்த நாளே பாடசாலைக்கு அனுப்பிப் போடுவம்' என்று அவ சொன்னதும் எங்கள் வீட்டார் பதில் எதுவும் சொல்ல வில்லை.

அம்மா தேநீரைக் கொண்டுவந்து வைத்தா. அந்த அன்ரி அதனைக் குடித்தபின் அவர்களைப் பார்த்து 'அந்தப் பிள்ளை பாவம்' என்று கூறினாள்.
'அது பாருங்கோ தீட்டுத்தானே. தோய வார்த்தாப் போலை தீட்டுக் கழிஞ்சிடும் அதுக்குப் பிறகு அவள் உலாவலாம் தானே' என்று அம்மா தன் பக்கத்து நியாயத்தை எடுத்துக் கூறினா. அம்மாவின் விளக்கம் அந்த அன்ரிக்குப் பிடிக்கவேயில்லை.
'இண்டைக்கு உதிலை இருப்பா..

வெளியிலை அவர் குடிசை போடிறார். தீட்டுக் கழியுமட்டும் அவ அதுக்குள்ளைதான் படுக்கவும் வேணும். சாப்பாடு அங்கை கொண்டு போய்க் குடுப்பம்' அம்மா இப்படிச் சொன்ன போது லண்டன் அன்ரிக்குப் பொறுக்கவே முடியவேயில்லை.

'என்ன விசர்க்கதை கதைக்கிறியள்...

பொம்பிளையளுக்கு நடக்கிற சாதாரண நிகழ்ச்சிதானே. அதுக்கு தீட்டு மண்ணாங்கட்டி என்று ஏன் இந்தச் சின்னப் பிள்ளையை வருத்திறியள். கொஞ்சம் கூட மனிதாபிமானமில்லாமல் செய்யிறியள்' என்று பொரிந்துதள்ளிவிட்டுப் புறப்பட்டுவிட்டா.

அம்மாவும் அம்மம்மாவும் ஆளையாள் பார்த்துக் கொண்டனர். அவ போனதும் இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

எனக்கு அந்த அன்ரி சொல்வதில் நியாயம் இருப்பதாகப்பட்டது. என் அபிப்பிராயம்தான் யாரும் கேட்பதில்லையே.

'நான் போய் முட்டை வாங்கிவாறன்' என்று கூறிவிட்டு அம்மா புறப்பட்டா. ஏன் அம்மா திடீரென்று முட்டை வாங்கப் போகிறா? எனக்கு முட்டை அவ்வளவாகப் பிடிப்பதில்லையே? 'முட்டையை வாங்கி வந்து எனக்குத் தரப்போகிறாவோ?' எனக்குள் நினைத்துக் கொண்டேன். 'அம்மம்மா அம்மா ஆருக்கு முட்டை வாங்கப் போறா?' என்று கேட்டேன்.

'வேறை யாருக்கு? உனக்குத்தான்' திடுக்கிட்டுப் போய் 'ஐயோ' என்று விட்டேன்.

'ஏன்ரி நல்ல நாளிலை ஐயோ என்டிறாய்' என்று என்னைத் திட்டினாள்.

'ஒரு நாளைக்கு நீ இரண்டு முட்டை காலைமையிலை பச்சையாய்க் குடிக்கவேணும்' அம்மம்மா சொன்னாள். அவிச்சுப் பொரிச்சாலே முட்டை சாப்பிட மாட்டேன். பச்சையாய்க் குடிக்கிறதென்றால் கலங்கிப்போனேன்.

அப்பா குடிசை போட்டு முடித்துவிட்டுக் களைத்துப்போய் உள்ளே வந்து உட்கார்ந்தார். அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'பிள்ளை அப்பா முடிச்சிட்டார் போலை இனி நீ அங்கைதான் போகவேணும்..'

'அம்மம்மா நான் என்னண்டு தனியப்படுக்கிறது.' என்றேன்.

'ஏன் படுத்தாலென்ன.. நாங்களெல்லாம் அப்பிடிப் படுத்துத்தானே வந்தனாங்கள்.'

அம்மம்மா பெருமையாகச் சொன்னாள். 'இரவிலை பாம்பு வராதே?' நான் கேட்டேன்.

'அப்பிடியெல்லாம் வராது பிள்ளை. நான் மண்ணை வளைச்சு வடிவாய்ப் போட்டிருக்கிறன். ஒரு புழு பூச்சிகூட உள்ளை வர முடியாது.' என்றார் அப்பா பெருமையாக. 'தென்னம் மட்டை விழாதே?' பயத்தோடு கேட்டேன்.

'விழும் ஆனால் பிரச்சினை இல்லை' இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவேயில்லை.

நான் சிறுமிதான் ஆனால் ஏதும் புரியாதவள் இல்லையே! முட்டையோடு அம்மா வந்துவிட்டாள்.

சிறிது நேரத்தில் மாமா வந்திருந்தார். அவரும் சிரித்த முகத்தோடுதான் வந்திருந்தார். அவரோடு அவரின் மகளும் வந்திருந்தாள். அவள் பெயர் மைதிலி. அவள் என்னோடு கதைக்க வந்தாள்.

'பிள்ளை அவளுக்கின்னும் தோய வார்க்கவில்லை. தீட்டு கிட்டப்போகாதை' என்று அம்மம்மா கத்தினா. அவளுக்கு அது பிடிக்கவில்லை. அவள் மாமாவைப் பார்த்தாள்.

அம்மாவும் அம்மம்மாவும் மோசம் என மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

'நீ போய்க்கதை' மாமா அம்மம்மாவை மீறிச் சொன்னார்.

'இந்தக் காலத்திலை உப்பிடி எல்லாம் சொல்லிப் பிள்ளையளைக் குழப்பாதையுங்கோ' அம்மம்மா வாயை மூடிக் கொண்டாள்.

அம்மாவும் எதுவும் சொல்லவில்லை. மைதிலி எனக்கருகில் வந்து கதைத்தாள். 'உனக்கு இது நடக்கயில்லையே.?' நான் கேட்டேன்.

'நடந்ததுதான்.. ஆனால் உப்பிடி அம்மாவும அப்பாவும் என்னை மூலையிலை இருத்தேல்லை.' அவள் பெருமையாகச் சொன்னாள். 'அங்கை வெளியிலை பார் ஒரு குடிசை.. அதுக்குள்ளை தான் நான் ஐஞ்சு நாளைக்குப் படுக்கவேணுமாம்' நான் சொன்னேன். அவள் எட்டிப் பார்த்தாள். மைதிலி திகைத்துவிட்டாள்.

'பழைய ஆக்களைத் திருத்தேலாது..' மைதிலிதான் சொன்னாள். மாமா எவ்வளவோ எடுத்துச் சொன்னார். யாரும் அவரை எதிர்த்துக் கதைக்கவில்லை. மௌனமாக இருந்தார்கள்.

யாரும் கேட்பதாக இல்லை. மாமாவும் மைதிலியும் போய்விட்டார்கள்.

நான் மூலையில் இருந்தபடி தொலைக் காட்சியைப்

பார்க்கிறேன். அதில் புயல் பற்றிய எச்சரிக்கை ஒலி ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. புயல் சம்பந்தமான விபரங்களையும் அதிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டைவிட்டு வெளியில் செல்வதைத் தவிர்க்கும் படியும் கேட்டிருந்தார்கள்.

இந்த நிலையில் எப்படி நான் வெளியில் படுப்பது. புயலின் அகோரத்தால் குடிசைமீது தென்னை மரங்கள் விழுந்து விட்டால் என்ன செய்வது? நினைக்கவே பயமாக இருந்தது.

அப்பாவுந்தான் அந்தச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பயப்பட்டதாகத் தெரியவில்லை. 'அப்பா நாளைக்குப் புயலாம்' நான் சொன்னேன்.

அப்பா என்னைப் பார்த்துச் சிரித்தபடி 'உவங்கள் உப்பிடித்தான் பிள்ளை சொல்லுவாங்கள்.. எதுவும் நடக்காதம்மா.'

என்று சர்வசாதாரணமாகச் சொன்னார். 'அப்பிடி நடந்தால்' 'நான் என் ஐயத்தை வெளிப்படுத்துகிறேன்.

அப்பா கெக்கட்டமிட்டுச் சிரிக்கிறார். 'அப்பா போட்ட குடிசை என்ன சாதாரணமானதா. இரும்பு மாதிரி. எந்தப் புயலுக்கும் அசையாது.' தைரியமாகவும் மிடுக்காகவும் சொல்கிறார்.

நான் எதுவும் கதைக்கவில்லை. நான் குடிசைக்குப் போவதற்குத் தயாராகின்றேன்.

அம்மாவின் மனதில் ஏதோ பட்டிருக்க வேண்டும். பெற்றவளல்லவா! தானும் வருவதாகச் சொன்னாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மம்மாவும் தானும் வருவதாகச் சொல்லி என்னோடு புறப்பட்டார்கள்.

இப்போ கொஞ்சம் தைரியமாக இருந்தது. இரவு நேரம் மூவரும் படுத்திருக்கிறோம். அப்பா குடிசையை நன்றாக அமைத்திருந்தார். திடீரென்று வெளியில் பலத்த சத்தம் கேட்டது. அம்மாவையும் அம்மம்மாவையும் பார்த்தேன். அவர்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். வெளியில் மரங்கள் முறிவதுபோன்ற சத்தம்.

மழை பலமாகப் பெய்து கொண்டிருந்தது. மழை பெய்தால் பாம்பு வரும் என்பார்கள். குடிசையின் அடிப் பகுதியைப் பார்த்தேன். மிக இறுக்கமாக இடைவெளி இல்லாமல் செய்திருந்தார் அப்பா.

நிம்மதியாக இருந்தது. குடிசைக்கு மிக அருகில் படாரென்று ஏதோ விழும் சத்தம் கேட்கிறது.

அம்மாவைத் தட்டிச் சொன்னேன். அவள் பெரிசு படுத்தவில்லை. என் கையைத் தட்டி விட்டுத் திரும்பிப் படுத்து விட்டாள். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

கடவுளே என்னைக் காப்பாற்று என்று வேண்டினேன். அப்போதான் ஞாபகம் வந்தது. கடவுள் களில் பெண் கடவுளர்கள் உண்டுதானே!

அவர்களுக்கும் ‘இது’ நடக்கும்தானே!

அப்போ அவர்களும் குடிசைக்குள்ளா படுப்பார்கள்!

பிழையான நேரத்தில் சரியான கேள்வி வருகிறது.

பயமாக இருக்கிறது. குடிசை ஆடுவதுபோல் தோன்றுகிறது. அம்மாவை எழுப்புகிறேன். ‘அம்மா வீட்டுக்கை போய்ப்படுப்பமா?’ கெஞ்சிக் கேட்கிறேன். அம்மா திட்டிவிட்டுப் படுத்து விடுகிறாள். அவர்களுக்கிந்தச் சத்தங்கள் கேட்கவில்லையா?

திடீரென்று எங்கள் குடிசைமீது ஏதோ விழுந்தது போல் சத்தம்.

என் நெஞ்சை யாரோ அழுத்துவது போன்ற உணர்வு. என்னால் தடுக்க முடியவில்லை.

அம்மாவும் அம்மம்மாவும் கத்தும் சத்தம் கேட்கிறது அந்தச் சத்தங்கள் மெது மெதுவாக என்னை விட்டுத் தூரச் செல்வதுபோல் இருக்கிறது.

**தமிழர் தளம் - 2019**

# ஆசிரியம்

அவன் அன்று காலை நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்தான்.

பல கேள்விகள் கேட்டார்கள். படபடவென்று பதில் கூறினான்.

முடிவில்வெளியில் காத்திருங்கள் அறிவிக்கிறோம் என்று கூறினார்கள். அவனும் வெளியே வந்து காத்திருந்தான். அவனைப் போலவே வந்திருந்த பலர் நேர்முகப் பரீட்சைக்கு உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாக இருந்தார்கள்.

சிலர் காத்திருக்காமல் போனார்கள். போனவர் களுக்கு நாளை அறிவிப்பதாகக் கூறியிருந்தார்களாம்.

இவனோடு இன்னுமொருவர் வெளியில் காத்திருந்தார்.

சிறிது நேரம் கழித்து நேர்முகப் பரீட்சையில் கேள்வி கேட்டவர்களில் ஒருவர் வெளியேவந்தார்.

இவர்கள் இருவரும் பரபரப்பாகினர். வந்தவர் நேராக இவனிடம் வந்து கையைக் குலுக்கினார்.

உங்களுக்கு இந்தப் பதவியைத் தருவதாக உள்ளோ மென்றும் கூறினார். இவனுடைய சந்தோசத்துக்கு அளவேயில்லை.

மற்றவரை நினைக்கும்போது இவனுக்குக் கவலையாக இருந்தது. போட்டியென்று வந்தால் ஒருவர்தானே வெல்ல முடியுமென்று மனதைத் தேற்றிக் கொண்டான்.

அவனுடைய வாழ்நாள் இலட்சியமான ஆசிரியத் தொழில் கிடைத்துவிட்டது.

வருகின்ற மாதமான வைகாசி முதலாந்திகதி ஆரம்பிக்கச் சொல்லிக் கேட்டிருந்தார்கள். சந்தோசமாகச் சம்மதித்திருந்தான்.

அவனுடைய வீட்டிலிருந்து பஸ்சில் பயணம் செய்ய வேண்டும். பாடசாலை தொடங்கும் நேரம் காலை ஒன்பது மணி. மூன்று முப்பதுக்கு முடிந்துவிடும்.

முதல் நாள் பாடசாலைக்கு புதிய உடுப்பணிந்து புறப்பட்டான். அப்பாவும் அம்மாவும் வாழ்த்தி அனுப்பினர்.

பாடசாலையில் முதல்நாள் ஆகையால் அதிபரைச் சந்திக்கும்படி கேட்கப்பட்டிருந்தான். அதிபர் நடுத்தர வயதை எட்டியவர். இவனை வரவேற்று வாழ்த்துக்கள் கூறினார்.

பாடசாலைபற்றி விலாவாரியாகக் கூறினார்.

ஆசிரியர்களின் ஒழுக்கம் பற்றியும் மாணவர்களின் ஒழுக்கம் பற்றியும் எடுத்துரைத்தார்.

பாடசாலையின் சரித்திரம் சொல்லவும் அவர் தயங்கவில்லை. அவர் கொஞ்சம் அதிகப் பிரசங்கிபோல் அவனுக்குப் பட்டது. அவனுக்கு ஏழாம் எட்டாம் வருட வகுப்புகளுக்கான கணித பாடம் கொடுக்கப்பட்டது.

கணிதம் அவனுக்கு இலகுவான பாடம்.

அவனுக்குப் பிடித்த ஒரு பாடம்.

இன்று வகுப்புகளை அவதானிக்கும் படியும் நாளையிலிருந்து படிப்பிக்க ஆரம்பிக்கும் படியும் கணிதப் பிரிவுக்கான தலைவர் கூறியிருந்தார். மறுநாளும் வந்தது. முழுமையான தயாரிப்புடன் வகுப்பறைக்குள் நுழைகிறான். அது ஏழாம் வகுப்பு.

இருபத்தெட்டு மாணவர்கள் வகுப்பறையில் இருந்தனர். அதில் பத்துப்பேர் பெண்கள், பதினெட்டுப்பேர் ஆண்கள். அவன் அவர்களைப் பார்த்து இன்று உங்களுக்குப் 'பின்னம்' படிப்பிக்க உள்ளேன் என்று கூறினான்.

அவர்களில் ஒருவன் இவன் கூறுவதைக் கேட்காமல் பக்கத்தில் உள்ளவனோடு கதைத்து அவனையும் குழப்பிக் கொண்டிருந்தான்.

இவன் அந்த மாணவனைப் பார்த்துக் கதைக்காமல் கவனிக்கும்படி கூறினான்.

அவன் கேட்பதாக இல்லை. கோபம் வந்தது ஆனால் கோபிக்கவில்லை. முதல் நாள் என்ற படியால் தன்னை அடக்கிக் கொண்டான்.

பாடசாலையில் பொறுமை காக்கவேண்டுமெனத் தகப்பன் அறிவுறுத்தியதை நினைத்துக் கொண்டான். இவனுக்குக் குழப்பமாக இருந்தது. சரி அவனை விட்டுவிட்டுப் படிப்பிக்க ஆரம்பித்தான்.

பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த இலகுவான கணிதப் பகுதி ஏன் இவர்களுக்குப் புரியவில்லை என்று குழப்பமடைந்தான்.

திரும்பத் திரும்ப பல உதாரணங்களுடன் விளக்கினான். பலர் விளங்கிக் கொண்டாலும் ஒரே ஒரு மாணவன் மட்டும் புரிந்து கொள்ளாமல் குழம்பினான்.

அவனுக்கருகில் போயிருந்து மிகவும் ஆறுதலாக அவதானமாகச் சொல்லிக் கொடுத்தான். அவன் புரிந்து கொள்வதாக இல்லை. பேந்தப் பேந்த விழித்தான். விளங்காத மாணவனுக்குப் புரிய வைப்பதுதான் உன் வேலையின் வெற்றியாகும் எனத் தகப்பன் கூறியதை நினைவு படுத்திக் கொண்டான்.

தலையைப் பிய்த்துக் கொண்டு சாகலாம் போலிருந்தது. ஏனிந்தத் தொழிலுக்கு வந்தோம் என்பது போலிருந்தது. பாடம் முடிந்ததற்கான மணி அடித்தது.

இவன் அந்தப் பையனைப் பார்த்து மத்தியானம் சாப்பாட்டு நேரம் என் அறைக்கு வா என்று கூறிவிட்டு அடுத்த வகுப்பெடுக்கப் போய் விட்டான்.

போகும் வழியிலும் அந்தப் பையனைப் பற்றித்தான் சிந்தனை. எப்படி பின்னத்தை அவனுக்குப் புரிய வைப்பது.

'என்ன யோசினையாய்ப் போறியள்' என்று அவன் சக ஆசிரியை கேட்கிறாள்.

இவன் அதனைக் கேளாதமாதிரியே போகிறான்.

அவனது சிந்தனை முழுக்க பின்னத்தை அந்தப் பையனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்பது தான். இது அவனுக்கொரு சவாலாகவும் இருந்தது.

'எல்லாருக்கும் மூளை ஒரேமாதிரித்தானே

இருக்கும். மற்றவர்களுக்கு விளங்கியதுபோல் ஏன் இவனுக்குப் புரியாதாம்' இந்தக் கேள்வி இவனைக் குடைந்து கொண்டிருந்தது.

மற்ற வகுப்பிலும் அவனால் ஒழுங்காகப் பாடம் எடுக்க முடியவில்லை.

மாணவர்களுக்கும் இவனுடைய பதட்டம் வியப்பைக் கொடுத்தது.

மத்தியானம் அவன் வரப்போகிறான். இன்னும் ஒரு வழியும் தென்படவில்லை.

விரைவாக வழி கண்டு பிடிக்கவேணும் இல்லை அவன் கண்ணில் படாமல் ஒழிந்து கொள்ளவேண்டும். திடீரென்று கண்களில் ஒரு ஒளி. வழி ஒன்று தெரிகிறது. அதிபரிடம் சென்று கூறிவிட்டு வெளியே உள்ள கடையை நோக்கி ஒடுகிறான்.

அங்கே இருந்து கேக் ஒன்றை வாங்கிக் கொண்டு வருகிறான். காட்சிப்படுத்தல் முறை (Visualisation) மூலம் புரிய வைக்கலாம் என்று மனம் சொல்கிறது. மத்தியானம் இவனுடைய அறைக்கு அவன் வருகிறான்.

அவனை அன்போடு அழைத்து வந்து கதிரையில் அமர்த்துகிறான். அவனும் சிரித்த முகத்தோடு அமர்ந்திரு க்கிறான். இவனுக்கோ சந்தோசம்.

அவனுக்கருகில் இருந்து தான் கொண்டு வந்த கேக்கை அது முழுசு என்பதை அவனுக்குப் புரிய வைத்தான். அவனும் புரிந்ததுபோல் தலையாட்டினான்.

இவனுக்கு மேலும் சந்தோசம். பின்பு அதனை இரண்டாக வெட்டினான். வெட்டிய ஒரு பாதியை கையில் வைத்துக் கொண்டு இது என்ன என்று கேட்டான்.

அவனும் சிரித்துக் கொண்டே கேக் என்றான். இவனுக்குக் கோபம் உச்சத்துக்கு ஏறியது. 'சரி. கேக் தான். இதன் அளவு என்ன?' என்று உறுக்கிக் கேட்டான். அவன் பயந்துவிட்டான். இவனுடைய அந்தச் சத்தம் அந்தச் சிறுவனை நடுங்கச் செய்தது. அழுது விடுவான் போலிருந்தது. அமைதியாக அவனருகில் சென்று 'சரி.. சரி.. என்னைக் கவனி. நான் கையில் வைத்திருப்பது இரண்டில் ஒன்று தானே' என்றான்.

அவன் இவனது கண்களை ஏறெடுத்துப் பார்க்கவே விரும்பவில்லை. எங்கோ பார்த்துத் தலையை மட்டும் அசைத்தான். இவனுக்கு எரிச்சலாக இருந்தது.

'என்னைப் பார். என் கண்களைப் பார்த்துக் கதை' என்று மீண்டும் சத்தமாகக் கத்தினான்.

அவன் நடுநடுங்கி ஓவெனக் கத்திக்கொண்டு வெளியே ஓடினான். இவன் அதனை எதிர் பார்க்கவில்லை. இவனும் வெளியே ஓடினான். இவனுக்கு நெஞ்சு பதைபதைத்தது. அவனுக்கு ஏதாவது நடந்துவிட்டால்.' இவனால் அந்தச் சூழ்நிலையை ஜீரணிக்க முடியவில்லை. ஏன் அவன் ஓடுகிறான். ஓடிக் கொண்டிருந்த அவனை இன்னொரு ஆசிரியர் பிடித்துக் கொள்கிறார்.

நிலைமை கட்டுக்குள் வந்து விடுகிறது. விடயத்தை அந்த ஆசிரியருக்குக் கூறுகிறான்.

அமைதியாகவும் கவனமாகவும் அந்தப் பையனைக் கையாளும்படி அவர் கூறுகிறார். 'நீங்கள் அவனுடைய தனிப்பட்ட தரவுகளை வாசிக்கவில்லையா?' என்று கேட்கிறார்.

இல்லை என்று சொல்ல விருப்பமில்லை. சமாளிக்கிறான். பாடசாலை முடிவதற்கான மணி அடிக்கிறது.

இவன் குழம்பிப் போய் இருந்தான். முதல் நாளே இப்படி ஒரு பிரச்சினை. வீட்டில் போயும் இவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. தன்னோடு கொண்டு வந்த அவனைப் பற்றிய அறிக்கையை வாசிக்கிறான்.

அந்தப் பையனுக்கு மன இறுக்கம் (Autism) என்ற குறைபாடு இருக்கிறது.

இணையத்தில் அது சம்பந்தமான அறிவைப் பெறும் முயற்சியில் ஈடுபடுகிறான். அவர்களோடு எப்படிப் பழக வேண்டுமென்றெல்லாம் போடப்பட்டிருந்தது.

தன்னுடைய மன இறுக்கம் தளர்ந்து அவனின் மன இறுக்கத்துக்கு ஏற்றமாதிரிக் கற்பிக்கும் திட்டத்துடன் பாடசாலையுள் நுழைந்து கொண்டிருந்தான். இம் முறை வெற்றிதான் என்ற தன்னம்பிக்கை அவனுள் பரவி இருந்தது. ஆசிரியம் என்பது படித்ததைக் கற்பிப்பது மாத்திரமல்ல என்ற கல்வி பற்றிய பரவல் அவனுள் வியாபித்துக் கொண்டிருந்தது.

**ஜீவநதி - 2019**

# கண்ணீரிலெழுத்து

'மரண ஊர்வலம்'.

அந்த வீதி முடக்கில் சுடலைக்குப் போகும் திசையில் திரும்பிக் கொண்டிருந்தது.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக மூன்று சவப் பெட்டிகள் சென்று கொண்டிருந்தன. சவங்களோடு செல்லும் மனிதர் களின் முகங்கள் இறுகிக் கறுத்துச் சோகமே உருவாக இருந்தன.

சவப் பெட்டிகள் ஒவ்வொன்றினதும் முன் பக்கத்தில் வீரமிகு தியாகிகள் என்ற சுலோகம் பெரிய எழுத்தில் ஒட்டப் பட்டிருந்தது.

ஊர்வலத்தில் நிலை குலைந்து கண்ணீர் வழிந் தோடத் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தான் செல்லன்.

செல்லனின் முகம் பேயறைந்தது போல் இருந்தது.

அவனது இதயக் குமுறல் கண்களினூடாகப் பீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவனைச் சுற்றிவர வருவோர் கதைக்கின்ற வசனங்கள் அவன் காதுகளில் நுழைகின்றன. ‘பாவம் விதி வந்திட்டுது’ ‘விதி என்னப்பா விதி அநியாயமாய்ச் சுட்டுத் தள்ளிப் போட்டாங்கள்’ பேச்சுகள் வளர்ந்தன.

செல்லனின் இதயமோ குமுறிக் கொண்டிருந்தது. அவனால் வாய் திறந்து ஒரு வார்த்தையாவது பேச முடியவில்லை.

தான் உயிருக் குயிராக வளர்த்த தன் பிள்ளை பிணமாகப் பாடையிலே போகுங்காட்சியை அவனால் தாங்க முடியவில்லை.

இரு கைகளாலும் தலைமேல் ஓங்கி அடித்தான். அவன் கண்முன்னே அந்தக் காட்சி விரிந்தது.

‘சங்கக் கடைத் தொழிலாளர்கள் யாவரும் வேலை முடிந்து துண்டுகளை உதறியவாறு தங்கள் பணங்களைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். செல்லனும் அவர்களில் ஒருவன். நாள் பூரா மூட்டைகளைச் சுமந்து வீடு செல்வதற்காகப் பணம் வாங்க மனேச்சரின் முன் சென்றான்.

அப்போது செல்லனின் மூத்த மகன் தலைதெறிக்க ‘அப்புச்சி.. அப்புச்சி’ என்று சத்தமிட்டுக்கொண்டு ஓடி வந்தான். எல்லாத் தொழிலாளர்களினது கண்களும் அவனை மொய்த்தன.

‘என்னடா மோனை என்ன நடந்தது?’ இப்படி அவன் கேட்டு முடிக்கமுன் அவனைத் தொடர்ந்து ஆவேசத்தோடு வந்த ஒரு கூட்டம் ‘டேய் நில்லடா துரும்பா. நாயே’ என்று அவனின் சாதியைக் குறித்துச்

சத்தமிட அந்தக் கூட்டம் அவனை நெருங்கியது.

பலர் கைகளில் கொட்டன்களுடன் நின்றிருந்தனர். அவர்கள் எல்லாரும கிராமத்தின் உயர் சாதிக் கூட்டத்தினர். 'டே துரும்பா சண்டித்தனம் காட்டினாய் பேந்தேன்ரா ஓடிறாய்' மீண்டும் அந்த உயர்ந்த சாதிப் பொடியன் கத்தினான்.

அவனோடு சேர்ந்து மேலும் பல வாலிபர்கள் சேர்ந்து கத்தினர். செல்லனின் மகன் போய் செல்லனை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டான். செல்லனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அடிக்க வந்தவர்களும் நெருங்கி விட்டார்கள்.

செல்லனோடு வேலை செய்த தொழிலாளர்களிற் சிலர் மெல்ல நழுவிக் கொண்டிருந்தனர். சிலர் போவதா? விடுவதா? என்ற ஐயத்துடன் செல்லனைப் பார்ப்பதும் அவனை அடிக்க வந்தவர்களைப் பார்ப்பதுமாக இடை நடுவில் நின்றிருந்தனர்.

சிலர் செல்லனுக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டு 'நாங்கள் எதுக்கும் தயார்' என்று சொல்வதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்தனர். அடிக்க வந்தவர்கள் இப்போ அருகில் வந்து விட்டனர்.

செல்லனுக்கு அசாதாரணமான தைரியம் வந்து விட்டது. செல்லனின் கைகள் அவன் கட்டிய சாரத்தை எடுத்து மெதுவாகக் கோமணங் கட்டின. அவனது முகத்தில் உயிரை வெறுத்த நிழல் ஆடியது.

அவனது படிப்படியான செய்கைகளைப் பார்த்த உயர் சாதிச் சண்டியர்கள் தயங்கினர். எவ்வளவு வேகமாக ஓடி வந்தார்களோ அந்த வேகத்தை இப்போ குறைத்தாலும்

'துரும்பருக்குப் பயப்பிடவோ' என்ற சாதித் தைரியம் மேலெழும்ப 'என்னடா துரும்பா கோவணம் கட்டிறாய்' என்று ஒருவன் கத்தினான்.

'நயினாருக்குச் சோறு போட' செல்லனது வாயிலிருந்து புறப்பட்ட இந்த நக்கல் வார்ததைகள் அவர்களைப் படீரெனச் சுட்டது.

துரும்புக்கு உவ்வளவு வந்துவிட்டதோ என்று கேட்டவாறே கையில் வைத்திருந்த கொட்டனால் செல்லனின் மண்டையில் அடிக்க ஓங்க.. இதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லனின் மகன் 'அப்புச்சி' என்று கதறியவாறு செல்லனுக்கு முன்னால் பாய்ந்தான். பாவம் செல்லனுக்கு விழவேண்டிய அடி அவன் மகனைப்பதம் பார்த்துவிட்டது.

'ஐயோ' என்றலறிக் கொண்டு விழுந்தான். கண்ணிமைக்க முன் நடந்த இந்த நிகழ்ச்சி செல்லனின் உள்ளத்தில் இனம் புரியா தொரு கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. அவனின் உணர்சிக் கொந்தழிப்பு 'பட்டியில் கட்டிய மாடு அவிழ்த்து விடப்பட்டது' போல விஸ்வரூபமெடுத்தது.

தன்னுயிரை வெறுத்துத் தன் மகனை அடித்தவர்கள் மேல் மின்னலெனப் பாய்ந்தான்.

அவனது கை பம்பரமாய்ச் சுழன்றது. கூட நின்ற தொழிலாளர்களும் செல்லனோடு கரங்கோத்தனர்.

பாவம் 'வெருண்ட காளை முன் பசு மாடுகள் எம்மாத்திரம்!' அவர்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினார்கள். யாராலும் அந்தத் தொழிலாளர்களுடன் மல்லுக்கட்ட முடியவில்லை. ஓடி விட்டார்கள்.

அங்கு இப்போது செல்லனும் காயம்பட்ட தொழிலாளர்களும் அடிபட்டு விழுந்த செல்லனின் மகனும் மட்டும்தான் எஞ்சியிருந்தனர். செல்லனின் மண்டையிலிருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. எல்லாருமாகச் சேர்ந்து செல்லனின் மகனைத் தூக்கிக் கொண்டு சென்றனர்.

மறுநாள் யூனியன் முன்றல் வெறிச்சோடிப் போயிருந்தது. சாமான் லொறிகள் வந்து வரிசை வரிசையாக நின்றிருந்தன.

துரும்புகளை வேலைக்கு விடமாட்டோம் என சில உயர் சாதி இளைஞர்கள் கையில் கொட்டன்களுடன் கதைத்துக் கொண்டு ரோந்து சுற்றும் பொலிசார் போல் நின்றிருந்தனர். அந்தக் கிராமமே கொந்தளிப்பில் இருந்தது.

'கீழ்ச் சாதிக்காரன் மேல்ச் சாதிக்காரனுக்கு அடிச்சிட்டான்' இதுதான் அங்குமிங்கும் அலையும் வார்த்தைகளாக இருந்தன.

கீழ்ச்சாதி மக்கள் யாரும் அன்று வேலைக்குப் போகவில்லை. அந்த இடத்தில் வழிவழியாக மூட்டை தூக்குபவர்கள் சாதி குறைந்தவர்கள் என்று மகுடமிடப்பட்ட செல்லன் போன்ற மனிதர்களே.

இருப்பதைச் சாப்பிட்டுக்கொண்டு வீட்டுக் குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். ஊரிலுள்ள உயர் சாதிப் பிரமுகர்கள் எல்லாரும் ஒன்று கூடி யூனியன் வேலையை உயர் சாதி வாலிபர்களே செய்யவேண்டு மென்று தீர்மானித்தனர்.

இதற்கு அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மறைமுகமாக ஆதரவாகவே இருந்தனர்.

உயர்சாதி வாலிபர்களும் இதற்குச் சம்மதித்தனர். வேலைகளும் ஆரம்பமாகின.

லொறிகளில் உள்ள சாமான்களும் துரிதமாக இறக்கப்பட்டன. இவ்வளவு நாளும் சும்மா சாப்பிட்டுவிட்டு உல்லாசமாக இருந்தவர்களுக்கு இப்போதுதான் கஸ்டம் என்றால் என்ன என்பது விளங்கியது.

நாட்களும் நகர்ந்து கொண்டிருந்தன. இன்னமும் சமரசம் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் மூட்டை தூக்க ஐம்பதுபேர் மட்டில் வந்தனர். இப்போ அந்த எண்ணிக்கை ஐந்தாகிவிட்டது.

இரு பக்கத்தாரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. வேலைகள் தேங்கின. உயர் சாதியைச் சேர்ந்தவர் களின் மனங்களில் வன்மம் பதிந்திருந்தது.

கீழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் பாடும் கஸ்டமாக விருந்தது. எவ்வளவு நாட்கள்தான் உணவின்றி இருப்பது. எல்லாரும் ஒருநாள் கூடிக் கதைக்கத் தொடங்கினர்.

இவர்கள் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தபோது நேரம் நள்ளிரவு 12 மணியாகும். இந்த விடயம் அவர்களுக் குத் தெரியவர 'ஏதோ திட்டம் போடுகிறாங்களாம்' கதை இப்படித்தான் ஊரில்பரவியது.

ஒரு நாள்.... நள்ளிரவு ஒரு மணியிருக்கும். கீழ்ச் சாதிக்காரர்கள் பகுதிக்குள் உயர் சாதி வாலிபர்கள் புகுந்தார்கள்.

வேட்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன. இதைத் தொடர்ந்து 'ஐயோ ஆத்தையிரோ.. சுட்டுப் போட்டான்கள்..' என்ற அவலக்குரல்கள் வானை முட்டின. இதன் வெளிப்பாடே மரண ஊர்வலம் இன்று சென்று

கொண்டிருக்கிறது.

ஊர்வலத்தில் செல்லனின் தலை நிமிர்கிறது. அவனது கண்கள் சுற்றவர நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்த உயர் சாதியினரைப் பார்த்துக் காறித் துப்புகிறது.

செல்லனின் கண்களில் கண்ணீர் துளிர்க்கிறது. அதில் வெற்றிகளை அடைய வேண்டுமாயின் தியாகங்கள் அவசியம் என்ற எழுத்துத் தோன்றுவதுபோன்ற பிரமை.

**இடிமுழக்கம் 1970**

# தெளிவு

'மொணவத மாத்தையா பலன்னே.' சுமணாவின் குரல் ஆச்சரியத்துடன் ஒலித்தது.

கஞ்சியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்த புஞ்சி பண்டா 'மொணவத?' என்றவாறு குடிசைக்கு வெளியே வந்தான். சுமணா அவனை இழுத்துக் காணியின் தொங்கலில் வீதியில் பியட் கார் ஒன்று நிற்பதைச் சுட்டிக் காட்டினாள். அதைப் பார்த்த புஞ்சி பண்டாவின் முகம் இறுகிக் கறுத்தது.

அவனிடமிருந்து வெறித்த பார்வையொன்று காரில் மோதித் திரும்பிக் கொண்டிருந்தது. சுமணா கேள்விக் குறி தொனிக்கப் புஞ்சி பண்டாவைப் பார்த்தாள்.

புஞ்சி பண்டா எதுவும் சொல்லவில்லை. அதற்குள் 'அம்மே' என்று குழந்தை அழும் சத்தம் கேட்டது. சுமணா உள்ளே போய்விட்டாள். புஞ்சி பண்டா காரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவ்வளவு திகைப்பையும் வியப்பையும் உண்டு பண்ணிய அந்தக்காரின் முதலாளியின் பெயர் பொடி அப்புகாமி.

பொடி அப்புகாமி குள்ளமான உருவம் கொண்டவர். அவரது நிறம் அசல் கறுப்பு. அவரது இடுப்பில் ஒரு பெலிற் எந்நேரமும் பளிச்சிட்டுக் கொண்டேயிருக்கும். இத்தனை லாவண்யங்களும் நிறைந்த அந்த மனிதரின் கண்கள் அந்தக் காணியின் விஸ்தாரத்தைப் பார்த்து அகல விரிந்து மலர்ந்தன. மெல்லிய புன் சிரிப்பு ஒன்றைத் தவழ விட்டவாறு அந்தக் காணிக்குள் இருக்கும் குடிசைகளைக் கண்வீச்சினால் எண்ணிவிட்டுச் 'சமாளிக் கலாம்' என முணுமுணுத்தவாறு காரினுள் நுழைந்தார். குசன்சீற் ஒருமுறை அவரைத் தூக்கிப் போட்டது. காரும் சத்தமில்லாமல் 'தெள்ளிய ஓடையில் மெல்லென' நகரும் படகுபோல் மெதுவாக நகர்ந்தது.

இவ்வளவு நேரமும் ஒன்றையும் விடாமல் எல்லாவற்றையும் கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருந்த புஞ்சி பண்டா கண்ணைக் கசக்கிவிட்டவாறு சாரத்தைச் சிரைத்துக் கொண்டு திண்ணையில் உட்கார்ந்தான்.

சுமணாவும் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்து அவன் முன்னால் உட்கார்ந்து மார்புச் சட்டையை அவிழ்த்துக் குழந்தைக்குப் பால் கொடுத்தாள். புஞ்சிபண்டா எதையும் கவனியாதவனாக ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டிருந்தான்.

திண்ணையிலிருந்து கொண்டே வானத்தை நிமிர்ந்து பார்த்தான். கதிரவன் நகர்ந்து கொண்டிருந்தான். அவனது கிரணங்கள் ஆங்காங்கு நிழலை விழுத்திக்

கொண்டிருந்தன. இந்த இயற்கை மாறுதல்களையெல்லாம் ரசிக்க புஞ்சி பண்டா போன்றவர்களுக்குத்தான் நேரம் ஏது? உள்ளங்கையைத் திண்ணையில் ஊன்றி பெருமூச்சு ஒன்றை விட்டவாறு எழுந்து நின்று சாரத்தை அவிழ்த்து இறுக்கிக் கட்டினான். தன்னோடு சேர்ந்திருக்கும் அந்தக் குடிகளை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். அந்தப் பார்வையின் வேகத்தில் அவனுள்ளே அடங்கிச் சுருண்டு கிடந்த அந்தக் காணியின் பூர்வகதை மெல்ல அவிழ்கிறது.

'அந்த நேரம் அந்தக் காணி ஒரே முள்ளுப் பற்றையாகவே இருந்தது. முகம்மது சரீபுக்கு அந்தக்காணி மனைவி வழியால் வந்த சீதனச் சொத்து. இந்தக் காணியைப்போல ஏராளமான சொத்துகள் முதுசமாகவும் சீதனமாகவும் முகம்மது சரீபினுடைய ஆதன வலிமையை அதிகரித்துக் கொண்டிருந்தன.

இதனால் பற்றைகளாக இருந்த எல்லாவற்றையும் விற்றுவிடமுயன்று இந்தக் காணியை விற்கின்ற முயற்சியில் தோல்வி அடைந்து சோம்பிப் போய் இருந்தார் சரீபு.

இந்த நேரம்தான் வீடில்லாது அந்தரித்துத் திரிந்த சில சிங்களக் குடும்பங்களும் தமிழ்க் குடும்பங்களும் முகம்மது சரீபை அணுகி தாங்கள் அதைத் துப்பரவாக்கி இருக்கப் போகிறோமென்று கேட்டபோது முதலில் மறுத்தாலும் பின்பு சம்மதித்து விட்டார். அந்தக் குடிகளில் ஒரு குடிதான் புஞ்சி பண்டாவின் தந்தை குடும்பம்.

அன்றைய காணியின் வரலாறை அசை போட்ட புஞ்சி பண்டா சிறிதுநேரம் அசைவற்று நின்றுவிட்டான். இன்று அந்தக் காணியில் புஞ்சி பண்டாவும் சுமணாவும் இன்னும் சில சிங்களக் குடிகளும் கூடுதலான தமிழ்க்

குடிகளும்தான் இருக்கின்றனர். ஆனால் அந்தக் காணியின் இன்றைய மதிப்பு அளவற்றது. இன்று அந்தப் பிரதேசம் குட்டி நகரமாகி காணி ஓரமாக ஓடும் வீதி கொழும்பு நகரத்தின் பிரதான வீதியாகிக் காணியின் விலையும் ஆனைவிலை குதிரை விலையாகி முகம்மது சரீபுவின் இதயத்தில் ஆனந்த சாகரத்தை உண்டு பண்ணி நிற்கிறது. நினைவுகளில் இருந்து விடுபட்ட புஞ்சி பண்டா நிஜ உலகத்துக்கு வந்து வேலைக்குப் போறன் என்று சுமணாவுக்குச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

காணியை வந்து பார்த்துவிட்டுப் போன பொடி அப்புகாமி சந்தோச மிகுதியில் நேராக முகம்மது சரீபின் வீட்டிற்கே வண்டியை ஓட்டினார்.

முகம்மது சரீபு அப்போதுதான் எங்கோ புறப்படு வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப் பத்தில் பொடி அப்புகாமியின் காரும் போய் நின்றது.

அப்புகாமி காரைவிட்டு இறங்க சரீபு பல் லெல்லாம் வெளித்தெரியக் 'காலை வந்தனம்' என்று சொல்லி விட்டு இருவருமாக வரவேற்பறையினுள் நுழைந்தனர். சம்பிரதாய பூர்வமாக வரவேற்ப்புப் பண்டங்கள் எல்லாம் வந்து போயின.

இருந்த இடத்திலேயே கை கழுவி விட்டு இருவரும் விடயத்தில் இறங்கினர். 'என்ன அப்புகாமி காணி பிடிச் சுதா?' என்றார் சரீபு.

'காணி சரிதான் ஆனால் விலைதான்' என்றிழுத்தார் அப்புகாமி.

'அதென்ன அப்படி நிரம்பவா சொன்னன்.. ஆகக் குறைய இரண்டுதானே சொன்னன்' மிகச் சாவதானமாகச் சொன்னார் சரீபு. அப்புகாமி என்ன சரீபுக்குச் சளைத்தவரா?

'அதில்ல'சரி நாளைக்கு முற்றுச் சொல்லுறன் சரீபு நீயும் யோசிச் சுப்பார்.. நாம்தான் நண்பர்களாச்சே நமக்குள்ளை பிசகு வரக்கூடாது.. மற்றது அந்தக் காணிக்குள்ளை இருக்கிறவங்களை எப்பிடி எழுப்பிறது..'

'அட அதுவா..உன்ரை ஆள் புஞ்சி பண்டா இருக்கிறானே அவனுக்கொரு அஞ்சைக் கொடுத்துச் சமாளிக்க மாட்டியா' சரீபின் வாயிலிருந்து விழுந்த யோசனைச் சிதறல் அப்புகாமியின் நெஞ்சில் படக்கென்று இடம் பிடித்துக் கொள்கிறது.

கார்கள் இரண்டும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நகர்கின்றன. ஆலையால் வேலை முடிந்து குடிசைக்கு வந்த புஞ்சி பண்டா பெருமூச்சு ஒன்றை விட்டவாறு திண்ணையில் அமர்ந்தான்.

அவன் வேலை செய்கின்ற ஆலையில் இரண்டு மாதங்களாக தொழிலாளருக்கும் ஆலை நிர்வாகத்துக் குமிடையில் பொருளாதாரப் பிரச்சினை இறுகிக் கொண்டிருந்தது. எப்போ வேலை நிறுத்தம் வெடிக்கும் என்ற நிலையில் ஆலை.

சுமணா அவனருகில் வந்து அமர்ந்தாள். அவளது அருகாமை அவனுக்குள் ஒரு பரவசத்தை ஏற்படுத்த அவளது அந்த மிருதுவான முடியைக் கைகளால் கோதினான்.

'என்ன அளவுக்கதிகமாக யோசிக்கிறியள்' சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்த அவன் வேலை நிறுத்தம் பற்றிய விடயத்தை மெதுவாகக் கூறினான்.

அவன் அதைக் கூறியபோது அவளுக்குத் திக்கென்றிருந்தது. இன்றைய சூழ்நிலையில் வேலை

செய்தே சமாளிக்க முடியாத வாழ்க்கைச் செலவை வேலை இல்லாமல் எப்படிச் சமாளிப்பது.

இருவரும் சில நிமிடங்கள் எதுவும் கதைக்க வில்லை. இருவர் மனதிலும் ஒரே விடயம் வெவ்வேறு கோணத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

உழைப்பாளியைச் சுரண்டும் முதலாளியைச் சும்மாவும் விடமுடியாது. சுமணா கொதித்துக் கொண்டிருப்பது அவனுக்குப் புரிந்தது.

சுமணாவைப் பொறுத்த மட்டில் இந்த வேலை நிறுத்தத்தில் அவன் கலந்து கொள்ளாதிருப்பதே மேல் என்று பட்டது.

'சுமணா வேலை நிறுத்தத்தில் நான் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை இல்லை. ஆலையிலை வேலை செய்யிற பல தொழிலாளர்களின்ரை பிரச்சினை.' என்றான்.

சுமணா கொதித்தாள்.

'அப்பிடியெண்டால் ஏன் கலியாணம் கட்டுவான். சீனி வாங்க வழியில்லை. மா வாங்க வழியில்லை. ஆனவாயிலை ஒரு பாண் துண்டு வாங்க வக்கில்லை. பிள்ளைப் பெற மட்டும் முடியும். அவன் தாறதை வாங்கிப் போட்டு பேசாமல் இருக்கிறதை விட்டிட்டு என்ன வேலை நிறுத்தம்' அவள் பொரிந்து தள்ளினாள்.

என்ன செய்வாள். காலங் காலமாக இருந்து வரும் அன்பு பாசங்களை எல்லாம் அவளால் எப்படித் தகர்த்தெறிய முடியும். கணவனும் பிள்ளையும் பட்டினி கிடக்க எந்த மனைவி, எந்தத் தாய் துடிக்காமலிருப்பாள்.!

அவளின் அந்த ஆவேசமான பேச்சு அவன் செய்வது பிழையோ என்ற சந்தேகத்தை அவன் மனதில் தோற்றியது. உடல் நொந்து வேலைசெய்யும் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சும் முதலாளிகளுக் கெதிரான போராட்டத்தை எப்படி அவனால் தவிர்க்க முடியும்.

மனதுக்குள் என்னதான் வந்தாலும் தான் கலந்து கொள்வதென்று முடிவை எடுத்துக் கொண்டு அமைதியிழந்து யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த நேரம் பார்த்தா பொடி அப்புகாமி வரவேண்டும். காரின் இரைச்சல் சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்தான். எதிரே பொடி அப்புகாமி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவனருகில் வந்த பொடி அப்புகாமி 'என்ன புஞ்சிபண்டா சவுக்கியமா?' என்று கேட்டுக் கொண்டே வந்தார். அவனும் எதையும் காட்டிக்கொள்ளாமல் சாந்தமாகப் பதில் சொன்னான்.

'என்ன உங்கடை ஆலையிலை தொழிலாளிங்க வேலை நிறுத்தம் செய்யப் போறாங்களாமே? நீ பங்கு பற்றலையா? என்று கேட்டார்.

'ஏன் நானும் தொழிலாளிதானே.'

'அதானே தொழிலாழியள் செய்தால் நீ பங்கு பற்றாமலிருக்கிறதா! எண்டாலும் புஞ்சி உனக்கு வாழ்க்கைச் செலவு கஸ்டமாயிடு மெல்லே?' 'கஸ்டம்தான் அதைப் பார்த்தா உரிமை கெடைக்குமா?' என்று மெதுவாக முணு முணுத்தான்.

'அட... அதைவிடு.. நான் உதவி செய்வன்.. நீ நம்ம இனம்.. உன்ரை ஐயா என்னட்டைத்தானே வேலை

செய்தவர்.' மெல்ல மெல்ல காரியத்துக்கு வந்து கொண்டிருந்தார் அப்புகாமி.

காரணத்தோடை முளைக்கின்ற இந்த அபாயப் புது உறவைப் புரிந்து கொண்டு மேலுக்கு நடித்தும் உள்ளுக்குள் சிரித்தும் கொண்டிருந்தான் புஞ்சி பண்டா. 'சரி புஞ்சி கவலைப்படாதை நான் பொறகு வாறன்.' என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டு விட்டார்.

வேலை நிறுத்தம் ஆரம்பமாகிவிட்டது. நியாயமான கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டன. முதலாளியும் விட்டுக் கொடுக்கிறதாக இல்லை.

தொழிலாளர்கள் வீடுகள் எல்லாம் பட்டினி. இதனால் குடும்பப் பிரச்சினைகள். இவை நடந்து கொண்டிருக்கும்போது அப்புகாமி திரும்பவும் அவன் வீட்டுக்கு வந்தார்.

'என்ன புஞ்சி பண்டா சுகமா? இன்னும் எத்தனை நாளைக்கு வேலை நிறுத்தம் செய்யப்போறாய். முதலாளி அடுத்த நகரத்திலையிருந்து ஆட்களை வேலைக்குக் கொண்டு வரப்போறாராம்' என்று கூறிவிட்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் எதுவும் கூறவில்லை. "அத்தோடை நான் இந்தக் காணியை வாங்கிப்போட்டன்" என்ற குண்டையும் தூக்கிப்போட்டார்.

பனையாலை விழுந்தவனை மாடு ஏறி மிரிச்சது போலை புஞ்சி பண்டா திடுக்கிட்டான்.

'நீங்கள் எல்லாரும் எழும்பவேணும்' நீ ஒத்திட்டால் உந்தத் தமிழன்களையெல்லாம் அடிச்சுக் கலைச்சிடலாம்.. நீ அதுக்கு உதவினியெண்டால் உனக்குப் பத்தாயிரம் சும்மா தாறன். உனக்கு உபயோகப்படும்' என்று கூறிவிட்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்படியொரு நிலைமையையும் புஞ்சி பண்டா எதிர் பார்த்தே இருந்தான். இதனால் அவன் திடுக்கிட வில்லை. அவன் நிதானமாகவே இருந்தான்.

'முதலாளி பேசிற மொழியாலை அவங்கள் தமிழன் களானாலும் செய்யிற தொழிலாலை எங்களுக்குள்ளை எந்த வித்தியாசமும் இல்லை. எங்களை உங்கடை பணத் தாலை பிரிக்கேலாது வேறை யாரையும் போய்ப் பாருங்கோ.' சூடாக விழுந்த இந்தப் பதிலால் முதலாளியின் முகம் கறுத்துவிட்டது.

'எடேய் என்னை ஆரெண்டு நினைச்சிட்டாய். நான் நினைச்சால் சட்டத்தைக் கொண்டு உங்களை எழுப்புவன். சல்லிக் காசு கூட கிடையாது. நம்மட இனத்த வனாச்சே என்று பார்த்தால் கொழுப்புக் கதைகதைக்கிறாய்.' என்று சத்தமாகக் கத்தினார்.

இவரின் சத்தம் கேட்டு எல்லாக் குடிகளும் அங்கே குழுமிவிட்டனர். புஞ்சி பண்டா எல்லாவற்றையும் அவர்களுக்கு விளக்கினான்.

'இந்தா மொதலாளி.. நீ போய் யாரை வேணு மெண்டாலும் கூட்டி வா.. எங்களிட்டை இழக்கிறதுக்கு எதுவு மில்லை. விளங்குதா' அவன் உரத்துச் சொன்னான். முதலாளி விறுவிறுவென்று நடையைக் கட்டினார். எல்லாருடைய கண்களும் புஞ்சி பண்டாவை அர்த்த புஸ்டியோடு நோக்கிக் கொண்டிருந்தன.

**தாயகம் 1971**

# நொண்டி

சுந்தரமூர்த்தி பாவம். பல தடவைகள் பலரால் பாதிக்கப்பட்டவன். ஆனால் எதனாலும் மனம் சோர்வடையாமல் தன் வாழ்க்கையை ஒவ்வொரு படியாக உயர்த்திக் கொண்டு வந்தவன். அவனுடைய ஊனம் அவன் உருவாக்கியதல்ல. பிறவியிலேயே அவனுக்கு வந்ததுதான். சிலவேளைகள் அதையிட்டு கவலைப் பட்டாலும் மறுகணம் நிமிர்ந்து விடுவான்.

நல்ல உயர்ந்த தோற்றம். ஊனம் மனதிலல்ல. காலில்தான். அவன் பிறக்கும்போது அவனுடைய வலதுகால் மற்றவர்களைப் போலல்லாமல் பாதம் மறுபக்கம் பிரண்டிருந்தது.

ஒழுங்காக நடக்க முடியாது. அவனுடைய அம்மா கர்ப்பவதியாக இருக்கும்போது வலது பக்கம் திரும்பிப் படுத்ததால் வந்ததாக அம்மா அடிக்கடி சொல்லிக் கொள்வாள்.

இதனால் அவன் என்றைக்குமே கட்டைக் காற்சட்டை போட்டதில்லை. நீட்டுக் காற்சட்டைதான் போடுவான்.

அவனுக்கு ஏழு வயதாக இருக்கும்போது கொழும்பில் வைத்து சத்திர சிகிச்சை நடந்தது. வெற்றியான சத்திர சிகிச்சை.

ஊனம் மாறிவிட்டது. அத்தோடு அவனுடைய வலதுகால் இடது காலைவிட சிறியதாகி விட்டது. இதனால் அவன் தாண்டித் தாண்டிதான் நடப்பான்.

இந்தத் தாண்டல் அவன் வாழ்வில் பல வைராக் கியங்களையும் பல பின்னடைவுகளையும் உண்டு பண்ணியது மறப்பதற்குரியதல்ல.

இந்தப் பின்னடைவுகளால் அவன் கூனிக்குறுகி வெட்கப்பட்டுச் சில சமயங்களில் தன்னை மாய்த்துக் கொள்ளவும் எத்தனித்திருந்தான்.

இதனால் அவன் தன் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

அவனுடைய அயராத முயற்சி அவனை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தது. இந்த நிலையில் முன்பு அவனை ஒதுக்கியவர்கள் நாடி வந்தபோது அவர்களைப் பரிதாபமாகத்தான் அவனால் பார்க்க முடிந்தது.

அவன் வெளிநாடு போன பின்தான் ஓரளவு அமைதி நிலையை அடைந்திருந்தான்.

வெளிநாட்டு வாழ்க்கை அவனுக்கு நம்பிக் கையையும் உற்சாகத்தையும் கொடுத்தது.

பல வருடங்கள் பிறந்த மண்ணைவிட்டு விலகி வெறுத்து இருந்த அவன் திடீரென்று ஒரு நாள் ஊருக்குப் போவதென்று முடிவெடுத்தான்.

கொழும்பில் கால் வைத்ததும் தன் கால் ஊனத்தால் தான் அழுத சந்தர்ப்பங்களை தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

ஒரு தடவை கொழும்பிலுள்ள ஒரு பெண்கள் பாடசாலைக்கு நாடகம் பழக்கச் சென்றிருந்தான். அந்த நாடகத்தில் துரியோதனன் போன்று மிடுக்காக நடந்து காட்ட வேண்டும் நாடகத்துக்குள் அவன் அமிழ்ந்து விட்டதால் தன் கால் ஊனத்தை மறந்து தாண்டித் தாண்டி அவன் நடந்தான். பின்பு துரியோதனனுக்கு நடிக்கும் பெண்ணை நடிக்கச் சொன்னபோது அவளும் தாண்டித் தாண்டியே நடந்தாள்.

அப்போதான் அவனுக்கு தன் ஊனம் நினைவுக்கு வந்தது. கொல்லென்று எல்லோரும் சிரித்தார்கள். அவனது கண்கள் கலங்கி விட்டன. இப்போது அதை அவன் நினைக்கும்போதும் அவன் கண்களில் நீர் பனிக்கத்தான் செய்தது.

இதை அவதானித்த அவன் மனைவி அவனைத் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தினாள்.

ஏழுபேர் இருக்கக்கூடிய வானில் அவனும் அவன் மனைவியும் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கினர்.

வான் சாமியன் அரசடிச் சந்தியைத் தாண்டிக் கொண்டிருந்தது. இந்த அரசடிச் சந்தியிலிருந்து இடப் பக்கமாகப்போக அம்பம் வைத்தியசாலையையும் தாண்டி நேரேபோக குஞ்சர் கடையடி வருகிறது. இப் பகுதியில்தான் பேர்போன அண்ணாவியார் இருக்கிறார். அந்தச் சந்தியைக் கண்டவுடன் அவனுக்கு அவர் ஞாபகம் வந்து வருத்தியது.

யன்னலினூடாக வெளியைப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தியின் மனம் பழைய காலத்துக்குத் தாவிச் செல்லத் தொடங்கியது.

அவனுடைய கிராமத்தில் அண்ணாவியார் ஒருவர் அரிச்சந்திரா நாடகம் பழக்கிக் கொண்டிருந்தார். அப்போ சுந்தரமூர்த்திக்கு பன்னிரண்டு வயதிருக்கும். அவனுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள முத்தழகு பின் அரிச்சந்திரனாக நடித்துக் கொண்டிருந்தார். சிறுவயதிலேயே நாடகத்தில் ஆர்வம் உள்ளதால் முத்தழகு அவனையும் கூட்டிக் கொண்டு சென்றார். சுந்தரமூர்த்திக்கு நிரம்பச் சந்தோசம். நாடக ஒத்திகை நடந்து கொண்டிருக்கிறது. ஆர்வமாகச் சுந்தரமூர்த்தி பார்த்துக் கொண்டிருக்கிறான். அங்கே அவர்கள் பாடும்போது அவனும் பாட்டை முணுமுணுத்தான். 'பிறந்ததும் மண்மேல்..'

என்ற பாடலை முத்தழகு உச்சஸ்தாயியில் பாடும்போது சுந்தரமூர்த்தி தன்னையுமறியாமல் பாடி விட்டான். எல்லோரும் அவனையே பார்த்தனர். அவனுக்கு என்னவோ போலாகிவிட்டது.

அண்ணாவியார் அவனைப் பார்த்து வியந்து அருகில் அழைத்தார். அவனும் அருகில் சென்றான்.

'உனக்கு நாடகத்தில் நடிக்க விருப்பமா?' என்று கேட்டார். சுந்தரமூர்த்திக்கு சந்தோசம் பிடி படவே இல்லை. உடனேயே தலையாட்டிவிட்டான்.

தன் இயலாமையை அந்தக் கணத்தில் மறந்து விட்டான். 'எங்கை அரிச்சந்திரன் பாட்டைப் பாடிக்கொண்டு நடி' என்றார். பாட அவனால் முடிந்தது. ஆனால் மற்றவர்கள் போல் அவனால் பாடிக்கொண்டு நடக்க முடியவில்லை. அழுது விட்டான். அப்போதான் அவனின் இயலாமையைப்

புரிந்து கொண்ட அண்ணாவியாரும் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி அமைதி கொள்ள வைத்தார். இந்த சம்பவம் அவன் மனதில் ஆறாவடுவை ஏற்படுத்தி விட்டது. தாயிடம் வந்து அதனைச் சொல்லி அழுததையும் நினைத்துக் கொண்டான்.

'இந்த ஊனத்தால் நீ ஒன்றும் குறையப் போற தில்லை. நல்லாய்ப்படி இந்த உலகமே உன் பின்னால் வரும்' என்று தாய் கூறியதை நினைத்துக் கொண்டான்.

அந்தக் காட்சியை நினைக்கும் போது மனசு சஞ்சலப்பட்டது. மனைவியைப் பார்த்தான். அவளும் அவனை ஆறுதலோடு பார்த்தாள்.

இன்னும் மனதைத் துளைத்த ஒரு சம்பவம் உண்டு. அந்த சம்பவம் அவன் வாழ்வில் பல மாற்றங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

மீண்டும் நினைவுகளுக்குள் மூழ்கிவிட்டான். சுந்தரமூர்த்தி இளவயதில் அரசியலில் ஈடுபட ஆரம் பித்திருந்தான். இதனால் அவனின் படிப்பில் உயர்வு ஏற்படவில்லை. இதனால் அவனுடைய உறவினர்கள் அவனைக் குறைத்தே மதிப்பிட்டார்கள். சுந்தரமூர்த்தியின் அம்மாவுக்கு அவன் இப்படியே இருந்தால் எப்படி அவனுக்குத் திருமணம் செய்வது என்பது பெரிய யோசினையாக மாறிவிட்டது. பலவிதமாகவும் முயற்சி செய்தாள். எதுவுமே சாத்தியப்படவில்லை.

சிலர் அவன் கால் ஊனத்தைச் சுட்டிக் காட்டினார்கள். சிலர் அவன் அரசியலையும் படிப்பில் கவனம் செலுத்தாமையையும் சுட்டிக்காட்டினார்கள். அவள் நிரம்பத் துயரப்பட்டாள்.

சுந்தரமூர்த்திக்கு அந்த எண்ணமே இல்லை. சுந்தர மூர்த்தியின் அம்மாவின் நம்பிக்கை உடைந்தபோது அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

ஒரு நாள் சுந்தரமூர்த்தியின் அம்மா தன் உறவினர்களின் பெண்ணைக் கேட்டாள். உறவினர்கள் என்பதால் அவளின் மனதில் ஒருவிதமான நப்பாசை.

அவள் கேட்டபோது அவர்களும் சங்கடத்துக் காளானார்கள். அவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை.

அவர்களுக்குச் சுந்தரமூர்த்தியில் அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை.

'குறை நினையாதையுங்கோ எங்கடை பிள்ளை நல்லாய்ப் படிக்கிறாள். சுந்தரமூர்த்தி படியாமல் திரியிறான். ஆளும் சொத்தி. இது சரிவராது. மறந்திடுங்கோ' சுந்தரமூர்த்தியின் அம்மா ஏங்கிப்போய் அப்படியே எதுவும் சொல்லாமல் எழுந்து வந்துவிட்டாள்.

தாயின் நிலையைப் பார்த்த சுந்தரமூர்த்தி நிலைமையை ஊகித்துக் கொண்டான்.

ஆத்திரப்படாமல் தாய்க்கு ஆறுதல் சொன்னான்.

'நான் இனிப் படிக்கிறன் அம்மா கவலைப்படாதை. இந்தச் சொத்தியனைத் தேடி அவை ஒரு நாளைக்கு வருவினம்.'

என்று கூறியபோது சுந்தரமூர்த்தியின் அம்மா அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை அவன் நினைத்த போது அவன் வாயில் புன்னகை வந்தது. அவன் மனம் தன் இயலாமையால் புழுப்போல் துடித்துக் கொண்டிருந்தது.

தான் ஊனமாகப் பிறந்தது தன் தவறா என்று தனக்குள்ளே கேட்டுக் கொள்வான்.

அரசியலோடு தன்னைப் பிணைத்த கயிறை அறுத்து முழுநேரமும் படிப்பதில் கவனம் செலுத்தினான். எல்லாப் பரீட்சைகளிலும் அவனே முன்னணியில் இருந்தான். அவனுடைய மாற்றம் உறவினர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

யார் யாரெல்லாம் அவனைப்பற்றிக் குறைவாகக் கதைத்தார்களோ அவர்களெல்லாம் அவனின் முன்னேற்றத் தைக் கண்டு மூக்கில் விரல் வைத்தார்கள்.

இப்போ அவனின் ஊனம் அவர்களுக்கொரு பொருட்டாகப் படவில்லை. இப்போ அந்த ஊனம் ஒரு இயற்கை விபத்தாகவே அவர்களுக்குப் பட்டது.

சுந்தரமூர்த்தியின் அம்மா யாரையும் கணக்கில் எடுக்கவில்லை. ஆனால் யாரையும் அவர்களைப்போல் எடுத்தெறிந்து பேசவே இல்லை. பதிலாக 'அவன் இன்னும் படிக்கவேணும் கொழும்புக்கு அனுப்பப்போறன். காலம் வரேக்கை எல்லாம் நடக்கும்' என்று நாசூக்காகச் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் கொழும்புக்குச் சுந்தரமூர்த்தியை அனுப்பும் போது அவனிடம் 'தம்பி நான் செத்தாப் போலையும் ஒரு சொந்தக்கார வீட்டிலையும் கல்யாணம் கட்டிப் போடாதை. நான் சாகும் வரைக்கும் கொழும்பிலேயே இரு' என்று சத்தியம் வாங்கித்தான் அனுப்பினாள்.

இதெல்லாம் நடந்து பல காலத்திற்குப் பின் வருகிறான். தாயை நினைக்கும்போது கதறி அழவேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

அவன் தாய்க்கு புற்று நோய் வந்து துன்பப் படுத்திய போதும் அவனை அவள் ஊருக்குவர அனுமதிக்க வேயில்லை. இதனால் அவனைப் பாசமற்றவன் என்று

பேசியவர்கள் பலபேர். அவன்பட்ட துன்பம் யாருக்குப் புரியும். அவன் தாய் இறக்கும் வரை ஊருக்கு வரவேயில்லை.

அவனின் துடிப்பு யாருக்குத் தெரியும். அதற்குப் பின்பு இப்போதான் ஊருக்கு வருகிறான். காயங்கள் ஆறி மனது ஒரு நிலைக்கு வந்தபின்தான் ஊருக்கு வரத் தீர்மானித்தான்.

அவன் திருமணம் புரிந்து பிள்ளைகள் பெற்றபின்பு சொந்த ஊருக்கு வருகிறான். அவன் அம்மா கேட்டுக் கொண்டபடி தன் சொந்தக்காரப் பெண்ணை திருமணம் முடிக்கவேயில்லை.

சொத்தியன் எப்படி இப்ப வாழ்கிறான் என்றும் அவன் எவ்வளவு அழகான துணையோடு வாழ்கிறான் என்றும் சொந்தக்காரர்களுக்குக் காட்டவேண்டு மென்பது அவன் நப்பாசை.

வான் சாரதியின் குரல் அவனை நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது. 'எந்த ஒழுங்கையாலை திரும்பிறது ஐயா' என்றார் வான் சாரதி. திடுக்கிட்டு விழித்த சுந்தரமூர்த்தி 'வடக்குப் பக்கம் திரும்பி பிறகு இடப்பக்கம் திரும்புங்கோ மூன்றாவது வீடு' என்றான் இப்போ அவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டான்.

அவனின் ஊனம் அவனுக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. சுந்தரமூர்த்தியின் மனைவியும் வான்காரரும் இவ்வளவு வருடங்களுக்குப் பிறகும் வீட்டை அவன் ஞாபகம் வைத்திருக்கிறதை நினைத்து வியப்படைய அவன் மனமோ திக்கற்ற காட்டில் நினைவுகளுள் அமிழ்ந்து கொண்டிருக்கிறது.

# லியோ என்னும் ஒரு நாய்க்குட்டி

நாய் வளர்ப்பதில் எனக்குப் பெரிதாக நாட்டமில்லை. ஒரு உயிரினத்தை வளர்ப்பதென்பது மிகக் கடினமான வேலை என என் மனதில் ஒரு கணிப்பு.

நாயை வளர்ப்பதென்பது யானையைக் கட்டிச் சோறு போட்ட மாதிரி என்று என் நண்பர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

ஊரிலே ஒரு நாயை வளர்ப்பதும் வளர்ச்சி அடைந்த லண்டனில் நாய் வளர்ப்ப தென்பதும் முழுக்க முழுக்க வித்தியாசமான ஒரு நிகழ்வு.

பிராணிகளை வளர்ப்பதற்கு இங்கு ஏராளமான சட்டங்கள் நடைமுறையிலுள்ளன.

இதனாலோ என்னவோ எனக்கு விருப்பம் குறைவாக இருந்தது.

ஒரு நாள் எனது துர் அதிஸ்டம். நாய் என் வீட்டுக்கு வந்தது. அதனைக் கொண்டு வந்தது என் மகன். மறுக்க

முடியவில்லை. ஏற்கவும் முடியவில்லை.

ஒரு மார்கழிமாதம் எங்கள் வீட்டுக்கு அழையா விருந்தாளியாக வந்த அந்த நாய்க்கு லியோ என்று பெயரும் வைத்தாயிற்று.

ஒரு வயது தான். அழகாக இருந்தது. துருதுருவென ஓடித் திரியும். சிறிய ரகம். பெரிதாக வளராது என என் மகன் சொன்னான். அதன் சாதி ஏதோ ஜெர்மன் செப்பேட் என்று சொன்னான்.

அது வந்தபின் அதன் மேல் எனக்கொரு பிடிப்பு வந்து விட்டது.

அதனோடு நான் விளையாடத் தொடங்கிவிட்டேன். வைரவரின் வாகனத்தோடு ஓடி விளையாடுவதில் எனக்கொரு சந்தோசம்.

அது சம்பந்தமான எல்லா அலுவல்களையும் நானே பார்க்கத் தொடங்கினேன்.

அவன் துள்ளித் திரிவான். நான் வேலையால் வந்து சோபாவில் படுத்திருக்கும்போது என் நெஞ்சுமேல் ஏறிப் படுத்துவிடுவான்.

என் மனைவி அவனோடு கதைக்கும்போது ஒரு பிள்ளையுடன் கதைப்பதுபோல் தான் கதைப்பாள்.

அவனும் எல்லாம் விளங்கியதுபோல் கேட்டுக் கொண்டிருப்பான்.

சில வேளைகளில் சோபா மேல் ஏறி மூத்திரம் பெய்து விடுவான்.

பாவம் அவன் என்று சொல்வோமே ஒழியப் பேசமாட்டோம். பேசி என்ன அவனுக்கு விளங்கவா போகிறது? அவன் செய்யாத அட்டாதுட்டி இல்லை. அவனுக் கென்றொரு மொழி இருக்கிறது.

என் மனைவி 'சோம் சோம்' என்று சொன்னால் வாலையாட்டிக் கொண்டு அவன் குளிக்குமிடத்தில் போய் நிற்பான். அவனை ஒரு பிள்ளையைக் குளிப்பாட்டு வதுபோல் குளிப்பாட்டுவாள். அவனைக் குளிப்பாட்டுவதில் அவளுக்கும் ஒரு அலாதி மகிழ்ச்சி.

எனக்கு வியப்பாக இருக்கும். அவனுக் கென்று பிரத்தியேகமாக உணவு வாங்கவேண்டும்.

நாம் சில உணவு வகைகளை வாங்கிவந்தால் 'ஏன் கொழுப்பு சாப்பாடு வாங்கி வந்தீங்கள்?' என்று மகன் சத்தமிடுவான்.

எவ்வளவு செல்லம்.!

அவனுக்கு வெடிச் சத்தம் என்றால் பயம். ஒரு தடவை வருடப்பிறப்பு நாள். வருகின்ற வருடத்தை வரவேற்று வானவெளியில் வாணவேடிக்கைகள் நடந்தன. லியோ பயந்து விட்டான். அங்கு மிங்கும் பாய்ந்து பாய்ந்து ஓடினான்.

எங்களுக்குப் புரியவில்லை. திடீரென்று மயங்கியும் விட்டான். குழப்பமான ஒரு நிலைமை. என் மனைவி அழுதாள். எனக்கு வியப்பாக இருந்தது.

அவனுடைய மயக்கம் எனக்குள்ளும் ஒருவித கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் நான் காட்டிக் கொள்ளவில்லை. அன்று இரவு அவனை எங்களுடைய படுக்கை அறைக்குக் கொண்டு சென்று எங்கள் கட்டிலின் அருகே அவனுக்குப் படுக்கை விரித்துப் படுக்கவிட்டோம். அமைதியாக உறங்கினான்.

அவன் இப்போ எங்கள் வீட்டில் ஒரு அங்கமாக மாறிவிட்டான். அவன் உலவாத வீட்டின் பகுதிகள் இல்லை என்றே கூறலாம்.

இந்தச் சூழ் நிலைக்குப் பங்கம் வந்தது. எனது மகளுக்குப் பிள்ளை பிறந்தது.

இவ்வளவு நாளும் பிள்ளையாகப் பார்க்கப்பட்ட அவன் முதன்முறையாக மிருகமாகப் பார்க்கப்பட்டான்.

பிறந்த பிள்ளை எங்கள் வீட்டுக்கு வருவதானால் லியோவின் வீட்டு நடமாட்டம் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது.

இதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்பட்டன. பிள்ளையை நாய் கடிக்கலாம் எனவும் நாயில் உள்ள ஒரு பூச்சி பிள்ளைக்குக் கூடாதென்றும் - அவனுடைய துப்பரவு காணாதென்றும் - பல விடயங்கள் முன் வைக்கப்பட்டு வெற்றிகரமாக எங்கள் லியோவின் வாசஸ்தலம் வீட்டின் பின் தோட்டம் ஆகியது.

பாவம்! வெளியில் நின்று கொண்டு கண்ணாடிக் குள்ளால் பார்ப்பான்.

என் மனைவி கண்ணாடிக்குள்ளால் அவனோடு கதைப்பாள். சில சமயங்களில் நான் வெளியில் சென்று அவனோடு உதைப்பந்து விளையாடுவேன்.

ஒரு தடவை வெளியில் நடந்த விடயம் இது.

எங்களது தோட்டத்தில் பின்னே உள்ள கட்டிடத்தைத் துப்பரவு பண்ணும்போது எலிக்கென்று வாங்கின மருந்து வெளியில் விடுபட்டுவிட்டது.

லியோ அதனைச் சாப்பிட்டும் விட்டான்.

இதனை எனது மனைவி கண்டுவிட்டாள்.

பெண்களின் மனது மென்மையானதுதானே. கத்திக் குளறத் தொடங்கிவிட்டாள்.

என்னவோ ஏதோவென்று பயந்து நாமெல்லாம் ஓடினோம்.

விடயம் புரிந்து லியோவைத் தூக்கிக் கொண்டு மிருக வைத்தியரிடம் ஓடினோம்.

அவர் மிகவும் அமைதியாக லியோவைப் பரிசோதித்து அவனைக் காப்பாற்றிவிட்டார்.

அன்று முதல் லியோவுக்கு வெளிக் கட்டிடம் முழுமையாக ஒழுங்கு படுத்தப்பட்டு அவனின் வாசஸ்தல மாக்கப்பட்டது. இவ்வளவு நாளும் செல்லப் பிள்ளையாக ஓடித் திரிந்தவனை நாங்கள் மட்டுப்படுத்தியதும் அவனுக்கு எங்கள்மேல் கோபம்.

குளிக்க வரும்படி கேட்டால் வரமாட்டான். அவன் காலைக் கடன்களைக் கழிப்பதற்கு வெளியில்வர மறுக்கத் தொடங்கினான்.

மறுத்ததோடல்லாமல் அவற்றை அறைக்குள்ளேயே செய்தான்.

மலசலம் கழித்தலை அறைக்குள்ளேயே செய்தான். அந்த அறையைச் சுத்தம் செய்யும்போது ஒரு தடவை மல்லாக்காக விழுந்துவிட்டேன்.

அன்றிலிருந்து லியோ மீது எங்களுக்கு வெறுப்புணர்வு வரத் தொடங்கிவிட்டது.

என் மனைவி பாவம் என்பாள்.

எந்த ஆத்மாவோ தெரியாது எங்களிட்டை நாய் வடிவிலை வந்திருக்குதெண்டு பச்சாதாபப் படுவாள்.

நான் விழுந்த நிகழ்வுக்குப் பிறகு அவனது அறையைச் சுத்தம் செய்வது என் மனைவியே.

அவனை வீட்டைவிட்டு அகற்றவேண்டு மென நான் எண்ணத் தொடங்கி விட்டேன். இதனால் என் மகனுக்கும் எனக்கும் இடையே நீண்ட விவாதம் நடக்கும். சில வேளை அது சண்டையாக மாறிவிடும்.

ஒரு நாள் என் மனைவியின் கால் வீங்கி விட்டது. வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றோம். மூன்று நாட்கள் வைத்தியசாலையில் பேரிடியான ஒரு செய்தி.

மிருக கழிவுகளினால் இந்த வியாதி வந்ததென வைத்தியர் கூறினார். லியோ தான் காரணம் என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது.

ஒரே தீர்வு லியோ வீட்டைவிட்டு வெளியேற்றப் படவேண்டும்.

அம்மாவுக்குத் துன்பம் வந்தது என் மகனைச் சிந்திக்க வைத்தது.

ஆனால் எப்படி?

இவ்வளவு நாளும் பிள்ளைபோல் வளர்ந்த அந்த ஆத்மாவை கொலை செய்யக் கொடுக்க முடியாது?

இதற்கு நாங்கள் யாருமே சம்மதமில்லை.

லியோவும் எங்களைப்போல் ஒரு உயிர்தானே.

லியோவின் உயிருக்கும் எங்களது உயிருக்கு மிடையில் ஒருவித சமநிலை ஏற்படத் தொடங்கியது. நாங்கள் மனித உடலுக்குள் இருக்கிறோம் அவன் நாயின் உடலுக்குள் இருக்கிறான்.

உயிர் உயிர் தானே என்கின்ற மனோபாவம் எங்கள் எல்லோருக்குள்ளும் வளரத் தொடங்கியது.

லியோ வெளியேறத்தான் வேண்டும். ஆனால் அவனைப் பிள்ளைபோல் பார்ப்பவர்கள் யாரோ அவர்களிடம் தான் செல்லவேண்டும்.

இந்தத் தீர்மானத்தில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

தேடத் தொடங்கினோம்.

எங்கள் தேடல் மனிதாபிமானம் நிறைந்த எல்லையற்றதாக இருந்தது.

அப்போதுதான் ஒரு வெளிச்சம்.

எங்களோடு பழகிய ஒரு குடும்பம். அவர்களின் பிள்ளைகளுக்கு லியோ மேல் கொள்ளை ஆசை.

தான் எங்களைவிட்டுப் போகப்போகிறேன் என்பதை உணர்ந்து கொண்டானோ என்னவோ தன் குழப்படிகளைக் கைவிட்டிருந்தான்.

குளிக்கும் இடத்தில் தானாகவே சென்று அமர்வான் எதையோ பறிகொடுத்தவன் போல் எங்களை அண்ணார்ந்து பார்ப்பான் தன் வாலை ஆட்டி ஒரு விதமான ஓசை எழுப்புவான்.

வெளியில் உள்ள பந்தைக் கவ்வி எங்களை விளையாட அழைப்பான். என் மனைவி அவனைப் பார்த்து மௌனமாக அழுவாள். அதைப் பார்க்கும் எனது உடம்பு சிலிர்க்கும்.

அந்த நாள் வந்தது. அவர்கள் சந்தோசமாக வந்திருந்தார்கள். அவர்களிடம் லியோவைக் கொடுத்தோம். அவன் பார்த்த பார்வை இருக்கிறதே! இதயமே நின்றுவிடும் போல் இருந்தது. எங்கள் எல்லோர் கண்களி லிருந்தும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. லியோ போய்க் கொண்டிருந்தான்.

**முகநூல் - 2019**

# கருவறை

புவனம் வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்தாள். என்ன வலியென்று யாருக்கும் தெரியவில்லை.

அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு அவள் அழும்போது அவள் வீட்டிலுள்ள எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழியும். வீட்டிற்கு வருவோர் போவோர் எல்லோரும் ஒவ்வொரு மருந்து சொல்வார்கள். அவர்கள் கூறிய எல்லா நாட்டு மருந்துகளும் பாவித்துப் பார்த்தாச்சு. இன்னும் குணமாகவில்லை.

வீட்டிலுள்ளவர்களுக்கு மிகுந்த கவலை.

அன்றாட காரியங்களும் தடைப்பட்டு வீடு சந்தோசத்தை இழந்து வெறிச் சென்று இருந்தது.

பார்க்காத வைத்திய சாலைகள் இல்லை. எல்லாம் பார்த்தாயிற்று. வைத்திய சாலையிலுள்ள சகல பரிசோதனை களும் அவளுக்குச் செய்தாயிற்று. எந்த வைத்தியராலும்

வலியின் மூலத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

விஞ்ஞானம் தோற்றுப் போனதான ஒரு நிலை. வைத்தியர்களையும் குற்றம் சுமத்த முடியாது. அவர்களின் அறிவுலகம் இயந்திரங்களின் முடிவுகளிலேயே தங்கியுள்து. அதைத் தாண்டி அவர்களால் சிந்திக்க முடிவதில்லை. இவர்களின் ஆராய்ச்சிக்காகப் படைக்கப் பட்டவளாகப் புவனம்.

சாப்பிட முடிவதில்லை. குனிய முடிவதில்லை. சிறிது நேரம் அமைதியாகக் கண்ணயர முடிவதில்லை.

அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு கத்துவாள். அவளின் கத்தலால் அந்த வீட்டின் அஃறிணைப் பொருள்கள் கூட அழும்.

அன்று ஒரு சனிக்கிழமை.

வலி மிக உச்சமாக இருந்தது. அவளின் வயிற்றுக்குள் யாரோ கத்தியால் குத்துவது போன்ற உணர்வு. புவனம் சுருண்டு கொண்டிருந்தாள். கதறு கதறென்று கதறினாள்.

அவளுக்கு மூன்று பிள்ளைகள். மூன்று பிள்ளைகளும் அன்று வீட்டில் நின்றிருந்தனர். தாய்படும் வேதனையை அவர்களால் சகிக்க முடியவில்லை.

தகப்பனைப் பார்த்தார்கள். அவர் ஒரு மூலையில் இருந்து அழுது கொண்டிருந்தார்.

புவனம் சுருண்டு கொண்டிருந்தாள். அவளின் வயிற்றுக்குள் யாரோ கையைவிட்டு குடல்களை இழுத்து அறுப்பது போன்ற வலி.

அருகில் உள்ள தமிழ்க் குடும்பத்தினரும் புவனத்தின் அழுகுரல் கேட்டு வந்துவிட்டார்கள்.

புவனத்தின் நிலையைப் பார்த்து ‘அம்புலன்சைக் கூப்பிடுங்கள்’ என்று புவனத்தின் கணவனைக் கேட்டார்கள். இப்படி எத்தனை தடவை அம்புலன்சில் போய் வந்து விட்டார்கள். ஏந்த மாற்றமும் நிகழ்வதில்லை. வெறுமனே வலிக்குறைப்பு மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

அவர்களின் வற்புறுத்தலால் புவனத்தின் கணவன் அம்புலன்சுக்குப் போன் பண்ணினான்.

அம்புலன்ஸ் வண்டிக்காரர்களுக்கும் இது பழக்கமான ஒன்றாகிவிட்டது.

பத்து நிமிடங்கள் கழித்து ஆடி அசைந்து வந்தார்கள்.

பலவிதமான பரிசோதனைகள் நடந்தன. வழக்கம்போல் புவனத்தை அம்புலன்சில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

புவனத்தின் கதறல் சத்தம் மட்டும் நிற்கவில்லை அம்புலன்ஸ் பத்து நிமிடத்தில் வைத்திய சாலையை அடைந்தது.

அவசரகாலப் பிரிவில் புவனத்தை ஒப்படைத்துவிட்டு அவர்கள் சென்று விட்டனர்.

வைத்திய சாலையின் அவசரகாலப் பிரிவு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. பல நோயாளிகள். குறைவான வைத்தியர்களும் தாதிகளும். தங்களால் முடிந்தளவு நோயாளர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

புவனத்தை ஒரு ஆசிய நாட்டுப் பெண் வைத்தியர் வந்து பார்த்தார். அவர்தான் முன்பும் ஒரு தடவை பார்த்தவர்.

வழமையான பரிசோதனைகளைச் செய்தார். வைத்தியரின் கேள்விகளுக்கு கத்தலினூடு புவனம் தன்னால் இயன்றளவு பதில்களைச் சொன்னாள்.

இந்தத் தடவை அவளின் பதில்களில் வைத்தியர் எதையோ கண்டு பிடித்தவர் போல் அவருடைய முக பாவனைகள் இருந்தன.

புவனத்தை ஸ்கேன் பண்ணவேண்டுமென்று கூறி அதற்கான ஒழுங்குளைச் செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில் புவனம் ஸ்கேன் நடை பெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டாள்.

புவனத்தின் கணவர் அமைதியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

ஒரு நாற்பது நிமிடங்கள் கழிந்திருக்கும். புவனத்தின் கணவரைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றார் வைத்தியர்.

இது எல்லாருக்கும் ஒருவித பயத்தைக் கொடுத்தது. கணவரும் வைத்தியரின் அறைக்குச் சென்றார்.

அந்த அறையில் சிறிது நேரம் அமைதி நிலவியது. 'உங்கள் மனைவியின் வலிக்கான காரணம் இப்போ புரிகிறது' என்று அமைதியைக் கிழித்துக் கொண்டு ஆரம்பித்தார் வைத்தியர்.

'உங்கள் மனைவியின் கருப்பையைச் சுற்றி ஒரு வெண்படலம் சுற்றியுள்ளது. இது பழைய சத்திர சிகைச்சை களினால் ஏற்படுவது.' என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் அமைதியானார்.

புவனத்தின் கணவர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

'அந்த வெண்படலம் கருப்பையின் சுயாதீன அசைவைக் கட்டுப் படுத்துவதால் வலி ஏற்படுகிறது' என்றார் வைத்தியர்.

'அதை நாங்கள் அகற்றாவிட்டால் அது குடல்களில் பற்றிக் கொள்ளும். கடைசியில் உயிருக்கே ஆபத்தாகிவிடும். அதனாலை அந்த வெண்படலம் மீண்டும் வராமலிருக்க கருப்பையை அகற்றுவதுதான் நல்லது' என்று கூறிமுடித்து விட்டுப் புவனத்தின் கணவரின் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

'நீங்கள் என்னைவிடப் படித்தவர் உங்களுக்குத்தான் இவவின்ரை நோயின் கடுமை தெரியும். எனக்கு அவ நோவிலிருந்து வெளியிலை வரவேணும். அதற்கேற்றதைச் செய்யுங்கோ.' என்று கூறினார்.

'இன்னுமொரு விசயம் நான் சொல்ல வேணும். இந்த சத்திர சிகிச்சை நடந்தால் அவவாலை இனிப் பிள்ளை பெறேலாது'

'இனி என்ன பிள்ளை. அவ வருத்தம் சுகமாகி சாதாரணமாய் எங்களோடை வாழ வேணும்.அவ்வளவுதான் எனக்கு வேணும்'

அவருடைய உறுதியான பதிலால் திருப்தி அடைந்த வைத்தியர்

'நீங்கள் வீட்டைபோய் உங்கடை மனைவி யோடையும் பிள்ளையளோடையும் கதைச்சிட்டு நாளைக்கு வந்து சொல்லுங்கோ. எதுக்கும் காலம் தாழ்த்தாமல் செய்யிறதுதான் நல்லது' என்று வைத்தியர் கூற புவனத்தின் கணவர் சம்மதித்துவிட்டு புவனத்தை நோக்கிச் சென்றார். காரில் வீட்டைபோகும்போது மெதுவாக வைத்தியர் சொன்ன விடயத்தை மனைவியிடம் கூறினார்.

அதைக் கேள்விப்பட்டதும் புவனம் திகைத்தது மல்லாமல் மறுத்துவிட்டாள்.

வீட்டில் புவனம் பிடிவாதமாகவே இருந்தாள்.

எல்லோரும் தனித்தனியாக இந்தச் சத்திர சிகிச்சை பற்றி அவளுக்கு விளக்கிக் கூறினர்.

இறுதியில் அடிக்குமேல் அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல் சத்திர சிகிச்சைக்கு புவனம் சம்மதித்தாள்.

புவனத்தின் மறுத்தலுக்கான காரணம் யாருக்குமே புரியவில்லை. பெண்களைப் பொறுத்தவரை கருப்பை என்பது கடவுள் வாழும் இடம்.

அவளின் இதயம் அழுது கொண்டிருந்தது. ஏதோ கொலைக்களத்திற்குப் போவது போன்ற உணர்வு.

அவள் யாருக்கும் எதுவும் கூறவில்லை. சத்திரசி கிச்சைக்கான நாளும் வந்தது.

வைத்திய சாலையில் புவனம் அனுமதிக்கப் பட்டாள். சத்திரசிகிச்சை செய்யும் வைத்தியர் வந்து நன்மை தீமைகளை விளக்கினார்.

அப்போது புவனம் மற்றவர்களை வெளியே அனுப்பும்படியும் தான் வைத்தியரிடம் தனியே பேச வேண்டு மென்றும் கூறினாள்.

சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

எல்லோரும் வெளியே சென்று கண்ணாடிக் குள்ளால் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

புவனம் ஏதோ வைத்தியரிடம் கூறுவதையும் அவர் அதனை ஆமோதிப்பதனையும் காணக்கூடியதாக இருந்தது.

எல்லோருக்கும் ஒரே குழப்பம். சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

புவனம் மயங்கிய நிலையில் வார்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டாள்.

அவளின் பிள்ளைகள் கணவர் எல்லோரும் கட்டிலைச் சுற்றவர நின்று கொண்டிருந்தனர்.

மெல்ல மெல்லக் கண்விழித்த புவனத்தின் கண்கள் அந்த வைத்தியரையே தேடின.

யாருடனும் அவள் முகங்கொடுத்துக் கதைக்கவில்லை.

தாதியைக் கூப்பிட்டு விடயத்தைக் கூறுகிறாள். வைத்தியருக்குச் செய்தி செல்கிறது.

வைத்தியர் வருகிறார். அவளை அழைத்துக் கொண்டு போகிறார். எல்லோரும் பின்னால் செல்கின்றனர். ஒரு அறைக்குள் இது நாள் வரையும் அவள் வயிற்றினுள் இருந்த அந்தக் கருவறை கண்ணாடிப் பெட்டிக்குள் சிதைந்துபோய் இருந்தது.

அதைப் பார்த்ததும் புவனம் விக்கிவிக்கி அழுதாள். அப்போதான் மற்றவர்களுக்கும் விடயம் புரிந்தது. பிள்ளைகளை அருகில் அழைத்தாள்.

'அவர்களைக் கட்டிப் பிடித்து உங்கடை அம்மாவடா பத்துமாதம் உங்களைச் சுமந்த அம்மாவடா. செத்துப்போய் கிடக்கிறாளடா' என்று கூறி அவள் விக்கிவிக்கி அழ எல்லோர் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

**முகநூல் - 2019**

# மூன்று மரங்கள்

'உந்த மரங்களாலை எங்களுக்குச் சரியான பிரச்சினை நீங்கள் புதிசாய் வந்திருக்கிறியள். எப்பிடியும் வெட்டி விடுங்கோ'

நான் அந்த வீட்டை வாங்கி முதல் நாள் பால் காய்ச்ச வந்தபோது பக்கத்து வீட்டுக்காரர் எனக்குச் சொன்ன வசனங்கள்தான் மேலே உள்ளவை.

இதனால் எங்களுக்குக் கொஞ்சம் கவலைதான். வரும் போதே பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது.

அந்த மூன்று மரங்களையும் பார்த்தேன். கெம்பீரமாக உயர்ந்து வளர்ந்திருந்தன. இடது பக்கத்தில் உள்ளமரம் கொஞ்சம் பருத்து இருந்தது. நடுவில் உள்ளது பருமனில் முதலாவதைவிடச் சிறியதாகவிருந்தது. வலது புறத்தில் உள்ளது மற்றைய இரண்டையும்விட சிறியதாக விருந்தது. மொத்தத்தில் மூன்று சகோதரர்கள் போல்

எங்கள் வீட்டின் பின்பக்கத்தில் வேலியோரத்தில் வரிசையாக இருந்தன.

வீடு பார்க்க வந்தபோது என்னைக் கவர்ந்ததே அந்த மரங்கள்தான். வீட்டுக்காரனை அவை என்ன மரங்கள் என்று கேட்டபோது அவை கிறிஸ்மஸ் மரங்கள் என்று சொன்னார். அது கேட்டவுடனேயே மனம் சந்தோசப் பட்டது. ஏதோ கடவுளே அங்கு வந்திருப்பது போல் ஒரு உணர்வு வந்தது. அந்த உணர்வுடனேயே அந்த வீட்டை வாங்குவதென முடிவு செய்து விட்டேன்.

வீட்டை வாங்கி வந்தவுடன் அந்த மரங்களே பிரச்சினை யானது கவலையாக இருந்தது.

மனைவியோ கரிச்சுக் கொட்டிக் கொண்டிருந்தாள். ‘என்னத்தைத்தான் நீங்கள் சரியாய்ச் செய்தனீங்கள். எல்லாத்திலையும் அவசரம். என்னை ஊருக்கனுப்பிப் போட்டு எல்லாத்தையும் நாசமாக்கியாச்சுது. எல்லாத்துக்கும் உணர்ச்சிப்படுகிறது. அறப்படிச்சவன் கூழ்ப்பானையுக்கை விழுந்தமாதிரிச் செய்து போட்டு இப்ப நின்று முழுசி என்ன பயன்’ மூச்சுவிடாமல் தனக்குத் தெரிந்த சொல்லுகள் பழமொழிகள் எல்லாவற்றையும் சொல்லி என்னை அக்குவேறு ஆணிவேறாக்கி விட்டாள். நான் எதுவும் பேசவில்லை.

லண்டனில் வீடு வாங்குவ தென்பது இலகுவான காரியமல்ல. நூறு இரு நூறு வீடு பார்த்தால்தான் ஓரளவுக்கு உங்களுக்குப் பிடித்த வீட்டை வாங்கலாம். அப்படி நான் கண்டுபிடித்த வீடுதான் இது. என் மனைவியோடு வீடு பார்க்கப் போனால் வீடு தேர்வது மிகக் கடினம். ஐம்பத் தெட்டுப் பிழைகள் பிடித்து எல்லாவற்றையும் நிராகரித்து

விடுவாள். நானும் மகனும் களைத்துப் போய்விட்டோம். அந்த நேரம் பார்த்து மனைவியின் தாயாருக்குச் சுகமில்லாமல் வர அவள் ஊருக்குப் போகும் சூழ்நிலை வந்தது. அந்த சூழ்நிலையை நாங்கள் பயன்படுத்திக் கொண்டோம். அந்தக் கோபத்தில்தான் அவள் கத்துவது எனக்குப் புரிந்தது.

அமைதியாகக் கேட்டபடி என் வேலையைச் செய்து கொண்டிருந்தேன். திருப்பிக் கதைப்பது ஆபத் தென்பது எனக்குப் புரியும்.

நான் தவறு செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. நான் முழுசவில்லை. பிரச்சினைக்கு விடை தேடுகிறேன். பக்கத்து வீட்டுக்காரனைப் பார்க்கும் போதெல்லாம் மனதுக்குள் ஒரு பயம். மரம் வெட்டுவதைப் பற்றி கேட்பானே என்கின்ற ஒரு பதட்டம். அவனுக்கு மரத்தில் என்ன கோபம்?

அது தன்பாட்டில் நின்று நிழல்தானே கொடுக்கிறது! நிழல் கொடுக்கும் மரத்தில் ஏன் இவ்வளவு வஞ்சம்?

அந்த மரத்தின் வேர்கள் நேராகப் பூமிக்குள் செல்வதில்லையாம். அவை படர்ந்து செல்லும் தன்மை கொண்டதாம்.

இப்படி அவை பரவுவதால் அவற்றால் தன் வீட்டின் உறுதிக்குப் பாதிப்பாம். அதனால் நான் அடியோடு வெட்டவேண்டுமாம். நான் செய்யாவிட்டால் வழக்குப் போடப் போவதாகவும் கூறினான்.

எனக்கோ மரங்களை வெட்டுவதில் அவ்வளவாக விருப்பமில்லை.

இந்தப் பிரச்சினை என் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. மரங்களை நாம் நினைத்தபோது நினைத்த வாறு இல்லாமல் செய்து விடுவதென்பது ஆன்மீக சமூக சட்டங்களுக்கு முரணாகவே எனக்குப்பட்டது.

மரங்களைத் தெய்வமாக வணங்குபவை இந்து சமயமும் புத்தசமயமும் தான். அரசமரத்தின் கீழ்தான் புத்தர் ஞானம் பெற்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பெரும்பாலான வைரவ கோயில்கள் அரசமரங்களின் கீழ் தான் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்று கேள்விப்பட்டுள்ளேன். இப்படிப் பல ஆதாரங்களைப் பக்கத்து வீட்டுக் காரனின் செவிகளில் போட்டு வைத்தேன்.

அவன் எதற்கும் மசிவதாக இல்லை. 'எல்லா வற்றையும் விட உயிர் முக்கியம் என்றான். இந்த மரங்களின் நீண்ட கொழுத்த வேர்களால் எங்கள் வீடு விழுந்தால் உங்களுக்குச் சம்மதமா' என்று கேட்கிறான்.

அத்தோடு பைபிளில் 'கனி கொடாத மரங்களை வெட்டி விடுங்கள்' என்றொரு வசனம் உள்ளதாகவும் கூறினான்.

இந்தப் பிரபஞ்சத்தில் முதன் முதலில் தோன்றிய உயிர் மரம் என்று நான் அறிந்ததைக் கூறினேன்.

மரங்களை நாம் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தினேன். அவன் கேட்பதாக இல்லை. திரும்பத் திரும்ப வழக்குப் போடுவேன் என்று மிரட்டினான். என்னைப் பார்த்து அவன் சிரித்தான்.

'அதற்கென்ன?' என்று நையாண்டியாக என்னைப் பார்த்தான். எனக்குக் கவலையாக இருந்தது.

அன்றிரவு அந்த மரங்களின் கீழ் சென்று தடவிக் கொடுத்தேன். அந்த மரங்களோடு நான் கதைப்பேன்.

சென்ற பிறப்பில் புண்ணியம் செய்த உயிர்கள் தான் மரத்தைத் தம் உடலாகக் கொள்ளுமாம்.

பாவம் செய்த உயிர்கள் தங்கள் பாவங்களைக் கழிக்க மனிதனாகப் பிறப்பதாகக் கூறுவார்கள். இந்த மனிதன் மேலும் பாவமூட்டைகளைக் கட்டிச் சுமப்பதற்காக மரங்களை வெட்டுகிறானே என்று நான் கவலைப் படுவேன்.

உணர்ச்சி மேலீட்டில் அந்த மரங்களை கட்டிப் பிடித்து முத்தமிட்டேன். அவர்கள் மூவரும் அழுவதுபோல் எனக்குப்பட்டது.

'அவன் சொல்வதும் சரிதானே. மரங்களாலை கனக்கப் பிரச்சினை. மூன்றும் இலை உதிர்காலத்திலை இலை கொட்டினால் பிரச்சினை. வேர்கள் நீட்டி வந்தால் எங்கடை வீட்டுக்கும் பிரச்சினைதானே. ஆரையும் பிடிச்சு வெட்டி விடுங்கோப்பா' என்று என் மனைவி கூறினாள். எனக்குக் குழப்பமாக இருந்தது.

என் குடும்பத்தில் எல்லோருமே சுயநலமாகவே சிந்தித்தார்கள்.

அன்று பூமரம் ஒன்றை நடுவதற்காக என் தோட்டத்தைக் கொத்தினேன். என்னால் கொத்த முடிய வில்லை. கிளறிப் பார்த்தால் மிகப் பெரிய வேரொன்று எமது வீட்டை நோக்கியதாய் வந்திருந்தது.

'அண்டைக்கே சொன்னனான். இதைத்தான் பக்கத்து வீட்டுக்காரனும் சொல்லிறான். உந்த மரங்களாலை எங்கடை உயிருக்கு ஆபத்து. ஏன் சொன்னால் கேளாயளாம். ஆரையும் பிடிச்சு வெட்டுங்கோ.'

பொரிந்து தள்ளினாள். வெட்டுங்கோ... வெட்டுங்கோ என் வீட்டைச் சேர்ந்தவர்கள், பக்கத்து வீட்டுக்காரன்,

வருவோர் போவோர் எல்லோரும் ஒரே மந்திரம்.

ஒரு உயிரைக் கொல்வதில் இவர்களுக்கு எவ்வளவு சந்தோசம். வருவது வரட்டும் இனியும் பொறுக்கேலாது. வெட்டுவதென்றே தீர்மானித்தேன்.

இது ஒரு கொடுமையான துயரமான தீர்மானந்தான். ஆனால் என்ன செய்வது?

நிர்ப்பந்தம் என்னை வென்று விட்டதே! மரங்களைப் பார்த்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன். மனசு மட்டும் கதறி அழுது கொண்டிருந்தது.

**முகநூல் - 2019**

# நான் நல்லவள்

நான் எந்த வகையிலும் குற்றவாளியாக இருக்க முடியாது. என்னைக் குற்றவாளியாக நினைத்து சந்திரனின் நண்பர்கள் செய்யும் வேலைகளைத் தாங்க முடியவில்லை. நான் என்றைக்குமே சந்திரனைக் காதலிக்கவில்லை.

சிவா கொல்லப்பட்டது எனக்கும் கவலையே. காதல் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. காதல் என்பதில் எனக்கு நாட்டமுமில்லை.

எல்லாருடனும் நண்பர்களாகவே பழகுகின்றேன். சிலர் என்னைக் காதலித்தால் நான் என்ன செய்வது? சிவாவின் கழுத்தை அறுத்து சந்திரன் கொலை செய்து விட்டான் என்பதைக் கேட்டபோது நான் குழப்பமடைந்து விட்டேன்.

சந்திரன் அடிக்கடி எடுத்து சிவாவோடை கதைக்க வேண்டாம் என்று சொல்வான். அது ஏன் என்பது எனக்குப் புரிவதில்லை. சிவாவும் சந்திரனும் நல்ல நண்பர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

சந்திரன் என்னை விரும்புகிறான் என்பதை சில சந்தர்ப்பங்களில் நான் புரிந்து கொண்டேன். நான் அதனைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொண்டதில்லை. சந்திரன் பற்றி பல விடயங்கள் எனக்குத் தெரியும். அவனுடைய குடும்பத்தில் அவன் மூத்தவன்.

அவனுக்கு ஒரு தம்பியும் இருக்கிறான். சந்திரனின் மனதில் அவனுடைய பெற்றோர் தம்பியில் கூட அன்பு செலுத்துவது போன்ற பிரமை படிப்படியாக வளர்ந்திருந்தது. அவனுடைய பெற்றோர் சந்திரனது தம்பி கனகாலத்துக்குப் பின் பிறந்ததால் அவன் மீது கூட அன்பு செலுத்துவதுண்டு என நினைக்கிறேன்.

என் வீட்டில் நான் தனிப் பிள்ளையாதலால் எனக்கு அப்படியான பிரச்சினைகள் இல்லை.

பெற்றாரின் இந்தச் செயல்பாட்டால் அவன் அடிக்கடி கோபம் கொள்வானென்று கேள்விப் பட்டிருக்கிறேன்.

இந்தச் செய்திகளெல்லாம் சந்திரனின் நண்பன் மூலமாகவே எனக்குத் தெரியும்.

சந்திரனின் இந்தத் தன்மை வளர்ந்து வந்திருக்கிறது. யாரும் இதனைக் கவனிக்கவில்லையென்றே நினைக்கிறேன்.

இது ஒருவகையான வருத்தமும் கூட என நினைக்கிறேன். எனக்கு வாசிக்கும் பழக்கம் உள்ளதால் பல புத்தகங்களைப் படிப்பேன். ஒரு புத்தகத்தில் மிகத் தெளிவாக இதனைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

நாளடைவில் தன்னை எல்லோரும் ஒதுக்குகிறார்கள் என்று சந்திரன் நினைக்கத் தொடங்கி இருந்தான் என நினைக்கிறேன்.

ஒரு நாள் சந்திரனின் தம்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அவனது சாப்பாட்டுக் கோப்பையைப் பறித்து எறிந்து அவனுக்கும் அடித்து பெரிய சத்தமாக அழுது குழறி அமர்க்களப் படுத்தியதாகக் கேள்விப்பட்டேன்.

இப்படியானவர்களுக்குத் தாம் விரும்பும் யாவும் தமக்கேயென்ற உரிமையுணர்வு (possessveness) அளவுக் கதிகமாக இருக்குமென்று நான் படித்திருக்கிறேன்.

இவர்கள் அதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்பதுதான் ஆபத்தான ஒரு விடயம்.

அவன் சிலவேளைகளில் ஹிஸ்டீரியா நோய் பீடித்தவன்போல் நடந்து கொள்வதாகவும் கேள்விப் பட்டேன்.

அவனையிட்டு என் மனதில் நிரம்பக் கவலையிருந்தது. நான் இப்பவும் சொல்கிறேன் நான் அவனைக் காதலித்ததில்லை. அவனுடைய இறப்புக்கு நான் எந்த வகையிலும் காரணமானவளாகவும் இல்லை. அவனுடைய நண்பன் சிவாவும் என்னோடு கதைப்பான். இதனை ஒன்று இரண்டு தடவை சந்திரன் கண்டிருக்கிறான். சிவா என்னைத் தன்னிடமிருந்து பிரித்துத் தான் காதலிக்கப் போகிறானோ என்கின்ற ஐயம் சந்திரனுக்கு வந்திருந்தது என்றே நினைக்கிறேன்.

ஏனென்றால் ஒரு தடவை எனக்கு முன்னால் சிவாவைச் சந்திரன் பேசக்கூடாத சொற்களைப் பிரயோகித்துத் திட்டியிருந்தான்.

நான் சிவாவையும் காதலிக்கவில்லை. இவர்கள் எல்லாம் எனது நண்பர்களே.

சில நாட்கள் சிவாவும் சந்திரனும் கதைப்பதில்லை என்று என் மற்ற நண்பர்கள் கூறினார்கள்.

சந்திரன் பாவம் அவனை நீ காதலித்தாலென்ன என மற்ற நண்பர்கள் கேட்பார்கள்.

இது என்ன நியாயம்? நீங்களே கூறுங்கள்? காதல் என்பது மற்றவர்கள் சொல்லி வருமா?

நான் மறுத்து அவர்களோடு வாதாடுவேன்.

சந்திரனின் தம்பிக்கும் என்னைத் தெரியும். அதே நேரம் அவனுடைய அண்ணா என்னைக் காதலிக்கிறான் என்ற விடயமும் அவனுக்குத் தெரியும்.

ஆனால் இது ஒரு தலைக் காதல் என்ற விடயம் அவனுக்குத் தெரியாது. அவனைப் பொறுத்தவரை நான் ஒரு நடத்தை கெட்டவள். அதாவது தன்னுடைய அண்ணனைக் காதலிப்பதுபோல் நடித்து மற்றவர்களோடும் தவறாகப் பழகி அண்ணனை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டான்.

அவனின் இந்த நினைப்பு பல பிரச்சினைகளுக்கு வழிகோலியிருக்கிறது என நினைக்கிறேன்.

ஒரு தடவை நான் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த போது சந்திரனின் தம்பி வந்து என்னை கன்னாபின்னா வெனப் பேசினான். என்னால் தன்னுடைய அண்ணன் நிம்மதியாக இருப்பதில்லை என்றும் என் நினைவாகவே இருந்து அழுகிறான் என்றும் திட்டினான். நானும் விட்டுக் கொடுக்காமல் சந்திரனை நான் காதலிக்க வில்லை என்றும் அவனாகவே என்னை விரும்பினால் நான் என்ன செய்வது எனப் பதிலுக்குக் கத்தினேன்.

நான் பலரைக் காதலிப்பதுபோல் தேவை கருதி நடிப்பதாகவும் நடத்தை கெட்டவள் என்றும் குற்றஞ்சாட்டி

விட்டு என் பதிலையும் எதிர் பார்க்காமல் சென்றுவிட்டான்.

இந்த சம்பவம் என் மனநிலையை மிகவும் பாதித்தது. நான் இதனை என் அம்மாவிடம் கூறினேன். 'இனிமல் ஒருவரோடையும் கதையாமல் உன் வேலையைப் பார்த்துக் கொண்டிரு' என அம்மா கூறினாள்.

ஆனாலும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என எனது உள் மனது கூறிக் கொண்டிருந்தது. இவன் இப்படி என்னோடு சத்தமிட்டுக் கதைப்பதை யாரோ சந்திரனுக்குச் சொல்ல அன்று சந்திரன் வீட்டில் ஒரே களேபரம் என்று அவர்கள் வீட்டுக்கு அருகில் உள்ள என் நண்பி வந்து சொன்னாள்.

சந்திரன் அவன் தம்பிக்கு அடித்ததாயும் வீட்டிலுள்ள சாமான்களை எல்லாம் போட்டு உடைத்த தாகவும் அவள் வந்து சொன்னாள்.

சந்திரனுடைய நடத்தைகள் நாளுக்கு நாள் மாறுதலடைந்து மனோவியாதி கொண்டவனாக மாறி விட்டான். அவன் உடனடியாக வைத்தியரிடம் செல்ல வேண்டும்.

வைத்தியரிடம் செல்லவும் மறுத்துவிட்டான். சந்திரனின் மனதில் சிவாதான் தன் காதலைக் குழப்புகிறான் என்ற எண்ணம் பதிந்துவிட்டது. ஆனால் உண்மை அதுவல்ல. அவனுக்கு அதைப் புரிய வைக்கவும் முடியாது. சந்திரன் என்னைத் தன் உடமையாக எண்ணத் தொடங்கி விட்டான். அதனால் தன் உடமையான என்னோடு யார் கதைத்தாலும் அவர்கள் மீது கோபம் கொள்வது அவன் வழக்கமாகிவிட்டது.

இதனைத் தவிர்ப்பதற்காக சிவா ஒரு நாள் அவன் வீடு சென்று நானும் சிவாவும் மற்றைய நண்பர்களின்

பிறந்தநாள் வைபவங்களில் இருக்கின்ற படங்களை அவனுக்கு முன்னால் அழித்துத் தெளிவு படுத்தினான். தனக்கும் எனக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்று சத்தியம் செய்தும் பார்த்தான். ஆனால் சந்திரன் ஆறுதல் அடையவில்லை.

இதைச் சிவா என்னிடம் சொல்லி அழுதான். சிவா ஒரு நல்ல நண்பன். சந்திரனோடு நெருங்கிப் பழகிய ஒரேயொரு நண்பன் சிவாதான். அவன் சந்திரனையும் அவனது வாழ்வையும் நினைத்து நிரம்பத் துன்பப் பட்டான். நான் அவனுக்கு ஆறுதல் கூறினேன். வேறென்ன நான் செய்ய முடியும்?

சந்திரன் ஒரு நாள் சிவாவை அழைத்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டவேண்டும் இருவரும் தனியே சென்று கதைப்போம் என்று கேட்டிருக்கிறான்.

சந்திரனோடு போகமுன் சிவா எனக்கு விடயத்தைக் கூறிவிட்டுத்தான் போனான்.

நானும் ஏதோ ஒருவிதமாக உங்கள் பிரச்சினைக்கு முடிவு கட்டுங்கள் என்று கூறினேன்.

ஆட்கள் நடமாட்டமில்லாத ஒரு இடத்துக்கு இருவரும் சென்று கதைத்துக் கொண்டிருந்தபோது சிவா எதிர்பாராத சூழ்நிலையில் சந்திரன் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவன் கழுத்தில் ஆழமாக வெட்டியிருக்க வேண்டும். சிவா கத்திக் குழறிக் கொண்டு ஓடியபோது அவனைக் காப்பாற்ற மனிதாமிமான ரீதியாக யாருமே முன் வரவில்லை என்று பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டேன்.

சிவாவின் வாழ்வு முடிவுக்கு வந்தது. சிவாவின் மரணத்துக்கு நானே காரணம் என்று நண்பர்கள் கோபமாக உள்ளனர்.

நான் என்ன செய்வது?

சந்திரனின் செயற்பாடுகளைப் பற்றி யாரும் கதைப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் சில மணித்துளிகளில் சிவாவின் மரண ஊர்வலம் என் வீட்டைத் தாண்டிச் செல்லவுள்ளது. சந்திரன் பொலிசாரிடம் அகப்பட்டுக கொண்டதாகவும் கூறிக் கொண்டார்கள். ஊர் முழுவதும் சிவாவின் மரணத்துக்கு நானேதான் காரணம் என்ற கதைதான் பரவிக் கொண்டிருந்தது.

நான் வீட்டின் ஒர் அறைக்குள் போய் முடங்கிக் கொண்டேன்.

வெளியே மரண ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

**அணிந்துரையிலிருந்து...**

தனது இளமைக்காலத்தில் இருந்தே பொதுவுடமைத் தத்துவத்தின் ஆழமான செல் வாக்கிற்குள்ளான தயாளன் சமூகக் கொடு மைகளைக் கிஞ்சித்தும் சகித்துக் கொள்ள முடியாதவர். அவரை ஏராளமாக எழுதத் தூண்டுவதே சமூகத்தில் மாற்றத்தை வேண்டி நிற்கும் கோட்பாட்டின் தாக்கத்தினால் அவரிடம் வேரூன்றியிருக்கும் சிறுமை கண்டு பொங்கும் குணவியல்பேயாகும் என்பதில் சந்தேகமில்லை.

– வீரகத்தி தனபாலசிங்கம்

(முன்னாள் தினக்குரல் ஆசிரியர்)



**பதிப்புரையிலிருந்து....**

தயாளனின் சிறுகதை வெளி பரந்தது. அது தாயகத்தின் வாழ்வியலையும் பேசும், புலம் பெயர் தேசத்து வாழ்வியலையும் பேசும். இரண்டையும் அவர் சமமாக பாவிப்பதனால் அவரது படைப்புக்களில் ஒரு சர்வதேச பார்வையை தரிசிக்க முடியும்.

உலகத்தை தனது கட்சி சார்ந்த பொது வுடமை தன்மையுடன் பார்த்திடும் அவரது பார்வை அவரது படைப்புக்களில் தெரிகின்றது.

– மகுடம் வி. மைக்கல் கொலின்

ISBN: 978-955-4041-17-2

9 789554 041172